
பதிவு என் 2041 | கதர் வாழ்க! | தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா





| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1—12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

[வாரதப்பதிப்பு]
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 8.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஹு கார்த்திகை மீ 5உ (20—11—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 30.



## கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று மிகவு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

கே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஹு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும் தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.


## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும், எட்டுப் பக்கங்களடங்கிய

### "குடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லா விவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப் பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களைச் சேர்த்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.


## திருப்பூர் கதர் பனியன்கள்.

குளிர்காலத்துக்குத் தகுந்த உபயோகமானவைகள்.

நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0, 32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமான கதர் ஜவுளி தினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா)

## "சூத்திரன்."

கோயமுத்தூர் ஸ்ரீமான் ராவ் பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் அடுத்த சட்ட சபையில் "சூத்திரன்" என்னும் விஷயமாய் கேட்கப்போகும் கேள்விகள்.

19—10—27-ல் 543ஆம் மெம்பர் கேள்விக்கு அளித்த பதிலை யொட்டி கனம் கல்வி ஸ்தல ஸ்தாபன மந்திரியவர்கள்

(1) "சூத்திரன்" என்ற தலைப்பின் கீழ் ஜில்லா போர்டுகளுக்கு நியமித்த 33 மெம்பர்களின் பெயரையும், முனிசிபல் கவுன்சிலுக்கு நியமித்த 6 மெம்பர்களின் பெயரையும், அவர்கள் நியமிக்கப்பட்ட ஜில்லா போர்டு முனிசிபல் சபைகளின் பெயரையும் தயவு செய்து தெரிவிப்பாரா?

(2) நியமன விண்ணப்பங்கள் அனுப்பி வைத்த அதிகாரிகள் அந்நியமன விண்ணப்பங்களில் ஷை மெம்பர்களில் யாரையாவது அல்லது எல்லாரையும் "சூத்திரன்" என்று குறிப்பிட்டிருக்கின்றார்களா?

(3) நியமன விண்ணப்பங்களில் அப்படிக் குறிப்பிடாவிட்டால், ஒவ்வொரு மெம்பரின் வகுப்பின் பெயரையும் "சூத்திரன்" என்று பிசகாய் வகுத்ததற்கு யார் ஜவாப்தாரி என்பதையும் தயவுசெய்து தெரிவிப்பாரா?

(4) எந்த மதம் அல்லது சரித்திர சம்பந்தமான ஆதாரத்தைக்கொண்டு "சூத்திரர்கள்" என்று வகுத்தார்கள் என்பதை தயவுசெய்து தெரிவிப்பாரா?

## இலங்கையில் காந்தியடிகளுக்கு வரவேற்பு.

நாளது 15—11—27ல் மகாத்மா காந்தியவர்கள் இலங்கைக்கு விஜயஞ் செய்திருந்தபோது இலங்கை நாடார்கள் கொளும்பில் ஸ்ரீ விவேகானந்த சபாவில் காந்தியடிகளை வரவேற்று, அவரது கதர் தொண்டை மிகவும் பாராட்டி கதர் நிதிக்கு ஒரு பணமுடிப்பும் அளித்து ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தார்கள் என்று கொளும்பு ஸ்ரீமான் ஜி. கல்யாண சுந்தர நாடார் அறிவிக்கிறார்.

சிங்கப்பூரில்
"குடி அரசு"
கிடைக்கும் இடம்:—
1 பிரிட்டிஷ் & அமெரிக்கன் நியூஸ் ஏஜென்சி, நெ. 6 பேட்டரி ரோட்டு, சிங்கப்பூர்.
2 ஜி. எஸ். நாயுடு அவர்கள் 105 மார்கட் வீதி, சிங்கப்பூர்.

## கும்பகோணத்தில் தேசீயம்.

1—11—27ல் நடை பெற்ற கும்பகோணம் முனிசிபல் சேர்மன் தேர்தலில் திரு. என். திருவேங்கடத்தய்யங்கார் வெற்றி பெற்றார். திரு. எம். சி. என். முத்துக்குமர செட்டியார் தோல்வி அடைந்தார். அய்யங்கார் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவர். தேர்தலுக்கு முன் பார்ப்பனரல்லாத கவுன்சிலர்களிடம் சென்ற பொழுது சிலரிடம், தான் கட்சியின் சார்பாக நிற்கவில்லை என்றும், சொந்த முறைமையில் நிற்பதாகவும் தெரிவித்துக் கொண்டார். வெற்றி பெற்றதும் கும்பகோணத்திலுள்ள அசோசியேடெட் பிரஸ் அய்யங்கார் நிருபர் கும்பகோணம் சேர்மென் தேர்தலில் சுயராஜ்ய கட்சியின் அபேட்சகர் திரு. என். டி. அய்யங்கார் அவர்கள் வெற்றி பெற்றதாக தந்தி கொடுத்திருக்கிறார். அய்யங்கார் அவர்கள் வெற்றி பெற்றதின் ரகசியம் என்னவென்றால், சுயேச்சை கட்சி மந்திரிகளுக்கு சிபார்சு செய்து தங்களுக்கு வேண்டிய கனவான்கள் சிலரை நியமனம் செய்யும்படியாக செய்து கொண்டார்கள். சர்க்கார் ஒதுக்கிவைத்துக்கொண்டிருக்கும் நியமனங்கள் என்பவை தேர்தலில் வரக்கூடாத வகுப்பினரின் பிரதிநிதிகளை நியமிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவை. ஆனால் கும்பகோணத்தில் நடை பெற்ற நியமனங்கள் எப்படி என்றால் தேர்தல் மூலமாக ஒன்பது பார்ப்பனர்களிருக்கிற பொழுது மற்றும் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். சில ஆண்டுகளுக்குமுன் தேர்தல் மூலமாக கவுன்சிலராக இருந்த ஒரு செல்வவந்தரின் சகோதரர் இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கிறார். இதில் ஒரு முக்கிய சம்பவம் என்னவென்றால் சர்க்காரால் நியமனம் செய்யப்பட்ட ஸ்தானங்கள் 28—10—27 வரையிலும் காலியாகாமலிருக்கும் பொழுது 25—10—27ல் 5 கனவான்கள் கெஜட் செய்யப்பட்டு விட்டார்கள். ஏனென்றால் தேர்தல் 1-11-27ல் போட்டிருந்தால், ஷை ஸ்தானங்கள் காலியான பிறகு கெஜட் செய்வதாக இருந்தால் ஷை தேர்தலில் ஷை கனவான்கள் கலந்து கொள்ள முடியாது. ஷை தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியின் இவ்வூர் தலைவர்களாக கருதப்ப[illegible] கனவான்களில் ஒருவர் சுயநலத்தி[illegible] பார்ப்பனர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தன்னுடைய வோட்டை அய்யங்காருக்கு கொடுத்ததுடன் மற்றொரு பார்ப்பனரல்லாத வோட்டு போவதற்கும் காரணஸ்தராக இருந்ததாக சொல்லப்படுகிறது. எந்தவிதமாகவோ முனிசிபல் சேர்மென் பதவியையும் பார்ப்பனர்கள் கைப்பற்றிவிட்டார்கள். தாலூகா போர்டு பிரசிடெண்டு பதவியை ஏற்கனவே கைப்பற்றி விட்டார்கள். இவ்வூரிலுள்ள டவுன் ஹைஸ்கூல், வாணாதுறை ஹைஸ்கூல், போர்டு டவுன் ஹால், கும்பகோணம் பாங்கு, யூனியன் பாங்கு, பரஸ்பரசகாய நிதி, கோவாப்பரேடிவ் பாங்கு, வாணி விலாச சபை இவைகளெல்லாம் அவர்கள் வசம் தானிருக்கின்றன. எல்லாம் பார்ப்பனர்கள் வசம் இருக்கிறதால் தேசீயம் இவ்வூரில் பொங்கித்ததும்பி வழி

## செங்குந்த சமூகம்.

'செங்குந்த சமூகம்' என்ற தலையங்கத்தின் கீழ் "திராவிடன்" எழுதும் குறிப்பாவது:—

7—10—27-ல் செங்குந்த சமூகம் என்ற தலையங்கத்தின் கீழ் நாம் குறிப்பிட்டுள்ள விஷயங்களில் சில தென்னிந்தியாவிலுள்ள எல்லா செங்குந்த சமூகத்தாரிடமும், பெண்களை கோவிலுக்கு பொட்டுக்கட்டி விடுகின்ற வழக்கம் இருப்பதாக பலர் நினைக்கும்படி இருப்பதாய் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கக்காரியதரிசி அவர்களால் நமக்குத் தெரியவருகிறபடியால் அதைப்பற்றி நாம் சிறிது விளக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதாவது கோவிலுக்குப்பெண்களைப் பொட்டுக்கட்டி விடுவது என்கின்ற வழக்கம் கோயமுத்தூர் ஜில்லாவில் உள்ள செங்குந்த மகா ஜனங்கள் என்பவர்களில் ஏதோ சில குடும்பங்களில் மாத்திரம் தான் இருந்து வருகின்றது என்பதாகக் கருதியே அதே பொருள்படும்படி எழுதியிருக்கின்றோமே ஒழிய அச்சமூகத்தைச் சேர்ந்த எல்லாக் குடும்பங்களிலும் இருக்கின்றது என்பதாகவாவது, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என்பதைச் சார்ந்த செங்குந்த மகாஜனங்களிடையில் இருக்கின்றது என்பதாகவாவது, நாம் கருதவில்லை என்பதை தெரிவித்துக் கொள்வதுடன், நாம் முன் எழுதியது அந்தப்படி ஒரு போதும் பொருள்படாது என்று மறுபடியும் தெரிவிப்பதோடு அப்படி யாராவது தப்பாய் நினைத்து வருத்தப்பட நேருவதாய் இருந்தாலும் அதற்காக நாம் மிகுதியும் வருந்துகின்றோம். "திராவிடன்"

## அய்யம்பாளையம் கிராமம் பஞ்சாயத்து கோர்ட்டு எலக்ஷன்.

12—11—27-தேதி மதுரை ஜில்லா திண்டுக்கல் தாலூகா கன்னிவாடி ஜமீன் அய்யம்பாளையம் கிராமம் மாஜி பஞ்சாயத்து கோர்ட்டில் கனம் தாசில்தார் ஸ்ரீமான் முத்திருளாண்டி பிள்ளை அவர்களின் தலைமையின் கீழ் சுமார் 500 ஜனங்களினிடையே அடியிற்கண்ட கனவான்கள் பஞ்சாயத்து கோர்ட்டு மெம்பர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

1 ஸ்ரீமான்கள் எஸ். அழகிய சுந்தரம் பிள்ளை, 2 எஸ். ராமசாமிநாடாவியர், 3. ஆர். சோமசுந்தரம் பிள்ளை, 4. எஸ். சுப்பன் செட்டியார், 5. எ. சுப்பராஜா, 6. வி. சின்னவயிரவன் செட்டியார், 7. எஸ். எறசவடய கவுண்டர் ஆகியவர்களே. இந்த மெம்பர்கள் எல்லோரும் பிராம்மணரல்லாதார்களாயும் பொது விஷயங்களில் சுயநலம் கருதாதவர்களாயும் இருப்பதைப்பற்றி எல்லோருக்கும் சந்தோஷம். ஷை மெம்பர்களுக்கு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக. "கிராம வாசி"

கின்றது என்று சொல்லுவார்கள். எப்பொழுது நம்முடைய சகோதரர்களுக்கு நல்லறிவும் சுயமதிப்பும் வருமோ கடவுளே அறிவார். "தேச ஊழியன்"

## அவியல்.

14-ம் பாகம்.

### கைவல்யசாமியார் எழுதுவது

மனிதனுடைய காரியசித்திக்குக் காரணம் சாமார்த்தியம். சாதாரண சமார்த்தியத்தால் மாத்திரமே காரியங்கள் சித்தியாவது துர்லபம். இடம் காலம் முதலியவற்றிற்கேற்ற சாமார்த்தியத்தால் காரிய சித்தி சுலபமாகும். இங்ஙனம் சமயோஜிதமான சாமார்த்தியமே சாதுரியமென்பது. கெண்டையைப் போட்டு வெறாலை யிழுப்பதும் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வதும் சாதுரியமே. கல்லைக்குத்துவானேன் கைநோகிறதென்றழுவானேன் என்று சும்மாயிருப்பதும் மௌனம் கலக நாஸ்தியென்று சில சமயங்களில் பேசாமலிருப்பதும் சாதுர்யமே. இவ்வித சாதுரியம் லௌகீக ஸ்திதிக்கு இன்றியமையாதது. இது சிலருக்கு இயற்கையில் அமைந்திருக்கும். இது சமயோஜிதமான சாமர்த்தியமாகையால் இதற்கு பொது விதியில்லை. இதையே லௌகீக தந்திரமென்றும் சொல்லுவார்கள்.

தாழ்ந்த ஜாதியார் என்று சொல்லுவதே ஞாயத்திற்கு விரோதம். என்றாலும் நம்தேச விவகாரத்திற்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. சாஸ்திர பண்டிதர்கள் கூடின கூட்டத்தில், தாழ்ந்த ஜாதியாரின் சுவாமி தெரிசனத்திற்காகவே ரதோத்சவம் ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னார்களே. அந்தப்பிரகாரம் பாலக்காட்டில் நடக்கும் கல்பாத்தி ரதோத்சவத்திற்கு எல்லா இந்து சமூகங்களையும் சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்வார்களா? கல்பாத்திக் கோவிலும் இந்து சமூகத்திற்குப் பொதுக்கோவிலென்று சமீபத்தில் தான் ஐக்கோர்ட்டிலும் தீர்மானமாயிற்று. தேர் சுற்றிவரும் ரோடு முனிசிப்பாலிட்டி கப்பியும் விளக்கும் போட்ட ரோட்டுதான். இந்து மதஸ்தர்களான தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆலயப்பிரவேசம் வேண்டுமென்று கேட்டால், சாஸ்திரிகளெல்லாம் கூடி, அவர்களுக்கு கோபுரத்திலும் ரதோத்சவத்திலும் சுவாமி தெரிசனம் செய்யலாம், அதுவே சாஸ்திர சித்தாந்தம், அதற்காகவே ரதோத்சவம் ஏற்பட்டிருக்கிறது. ரதத்திலேயே சுவாமியை தெரிசித்துக்கொள்ளட்டு மென்கிறார்கள். ரதோத்சவத்திற்குப் போனாலோ அடிக்கிறார்கள். 144 ம் போட்டுத்தடுத்தும் விடுகிறார்கள். பின் தாழ்த்தப்பட்ட இந்துக்கள் எங்கே போவார்கள்! என்ன செய்வார்கள்! ஏ தெய்வமே நீ இருப்பது மெய்யானால் உயர்ந்த ஜாதி இந்துக்களுக்கு நல்ல புத்தியை உண்டு பண்ணும், இல்லையேல் அன்னிய மதத்தில் சேர்ந்து இந்து தெய்வமான உனக்கும் உன்னைக்காட்டி எங்களை கெடுத்த மேல் ஜாதிகளுக்கும் இந்த தேசத்திலிருக்கும் சுவாதந்திரியங்களுக்கு இடம் கொடுக்க மாட்டோம் என்பது தவிர வேறு வழி என்ன?

இந்து மதமல்லாத இதர மதஸ்தர்களுக்கு கோவில்களில் சில தூரம் வரவும் தீண்டாமை இல்லாமலும் பொது ஸ்தலங்களில் சமத்துவ பாத்யதையும் உண்டு என்று அங்கீகரிக்க இடம் கொடுத்தது எந்த இந்துசாஸ்திரம்? தாழ்த்தபபட்ட இந்து சமூகத்திற்கு யாதொரு பாத்யதையும் இல்லையென்று சொன்னது எந்த இந்து சாஸ்திரம்? அதுவுமில்லை இதுவுமில்லை. அதில் அதிகாரமிருக்கறது இதில் அடிமையிருக்கிறது. கடவுளால் சொல்லப்பட்ட வேதம் அதிகாரத்திற்குப்பயப்படுமோ? அதிகாரத்திற்குப்பயப்படுவதில்லை. அடிக்குப்பயப்படுகிறது. ஆதி சங்கராச்சாரிக்கே தீண்டாமை நீங்கவில்லை என்று காசி விஸ்வநாதர் தீண்டாமை நீங்க உபதேசம் பண்ணினார் என்கிற கதை நிசமாகவிருந்தாலும் பொய்யாக விருந்தாலும் அந்த கால முதற் கொண்டே தீண்டாமையின் கொடுமை பாப்பார ஜாதியிலிருந்து உற்பத்தியாகி மற்றெல்லாச் சமூகங்களையும் கெடுத்தே தேசத்தையும் பாழ்பண்ணுகிற தென்பதை பார்ப்பாரே உணர்ந்து சங்கர் விஜயமென்னும் புஸ்தகத்தில் பாப்பாரே எழுதிவைத்திருக்கிறார்கள்.

தாழ்ந்த ஜாதி இந்துக்கள் இந்து மதத்தை விட்டு மற்ற மதத்திற்குப்போன உடனே எல்லா பாத்யதையும் பரிசுத்தமும் அடைந்து விடுவதை எல்லோரும் பார்க்கிறோம். நீங்களெல்லாம் பார்க்காத விசேடமொன்று மலையாள தேசத்தில் நடந்து வருகிறது. அதாவது உயர்ந்த ஜாதி இந்துக்கள் வீட்டிலோ தொடியிலோ தோட்டத்திலோ கூலி வேலைக்குத் தீண்டப்படாதவர்களை அமர்த்தி அவர்கள் கழுத்தில் கயிற்றில் கோர்த்த சிலுவையை மாட்டி விடுவார்கள். அவர்கள் வேலை தீர்ந்து வீட்டிற்குப் போகும் போது அந்த சிலுவையை வாங்கி வைத்துக்கொள்ளுவார்கள். சிலுவை கழுத்திலிருக்கையில் அவர்களுக்குத் தீட்டில்லை. எடுத்துவிட்டால் தீட்டு வந்து விடும்! வழியில் போகிறவர்கள் கூட கழுத்தில் சிலுவையை பார்த்தால் அதிக தூரம் விலக அவர்களை நிற்பந்திக்காமல் தாமே சிறிது தூரம் விலகிப்போய் விடுவார்கள். இந்த யௌடீகம் ஒரு பக்கமிருக்கட்டும். தீட்டைப்பற்றின அர்த்தமும் உங்களுக்கு ஒருவாறு [illegible]மாயிருக்கும். வேதங்கள் எத்தனை, சுருதி ஸ்மிருதிகள் எத்தனை, புராணங்கள் எத்தனை, வியாக்கியானங்கள் எத்தனை, மந்திரங்கள், யாகங்கம், எத்தனை, அங்கு சங்கல்பமும் வைதீக கோஷ்டியும் எத்தனை, அத்தனையும் ஒரு அங்குல இரண்டு பித்தளைத் தகட்டுக்கு முன்னால் பாலியாகி பாழடைந்து விட்டதே! இத்தனையும் அறிந்தால் தான் என்ன. நாமம் போட்டு ராமராம வென்கிறார்கள். சந்தன கோடிழுத்து சித்தாராம் கோவிந்தா வென்கிறார்கள். தரிப்பொட்டுபோட்டு வாயு பகவானை வருந்திக் கும்பிடுகிறார்கள். உத்திராக்ஷகண்டிகைகள் துளசிமாலை லிங்கம் சாலக்கிராமம் இத்தனையும் அணிந்து கொள்ளுகிறார்கள். அத்தனையும் ஒரு துளி கூட மனதையோ தேகத்தையோ பரிசுத்தபபடுத்துவதில்லை. ஒரு அங்குல நீளத்தில் இரண்டு பித்தளைத்துண்டை சிலுவையின் ரூபத்தில்மாட்டிக்கொண்டால் அந்த க்ஷணமே தேகம் மனம் எல்லாம் பரிசுத்தமடைந்து விடுகிறது! எல்லாச் சுதந்திரமும் வந்துவிடுகிறது! இது ஒன்றினாலேயே இந்து மதம் அழிந்து போகுமே யொழிய சத்தியமூர்த்தி அய்யர் ஆலோசனைப் பிரகாரம் பொட்டுக்கட்டுவதைநிறுத்தினால் இந்துமதம் கெட்டுப்போகாது.

நம் தேசத்தில் எந்த சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றாலும் மதம் கெட்டுப் போகுமென்றே சொல்லுகிறார்கள். தீண்டாமை போகவேண்டுமென்றால் மதத்தின் தத்துவமே கெட்டுப்போகுமென்று சொல்லுகிறார் துவார் பிராமணநாட்டுத் தலைவர். சிறு குழந்தைகளுக்குக் கலியாணம் பண்ணாமல் வயது வந்த பெண்களுக்குக் கலியாணம் பண்ணினால் இந்துமதம் கெட்டுப்போகுமென்கிறது சங்கரர் மடம். பகவத்கீதையை எல்லாரும் படித்தால் மதமே பாழடைந்து போகுமென்று கும்பகோணத்து பார்ப்பன புரோகிதர்கள் சொல்லுகின்றார்கள். ஆலயப் பிரவேசத்துக்கு சம்மதம் கொடுத்தால் வேதத்தைச் சுருட்டி கடலுக்குள் ஒளித்துவிடுவார், மன்வந்தரக் கணக்குப்பிரகாரம் பிர்மாவிற்கு இப்பொழுதாக்காலம், வராகவதாரத்தை சிருஷ்டிக்க முடியாது என்று வைதீகர்கள் சொல்லுகிறார்கள். இப்பொழுது ஸ்ரீமதி டாக்டர் முத்துலெட்சுமியம்மாள் சென்னை சட்டசபையில் விபசாரத்திற்காக மதத்தின் பேரால் கோவில்களில் பொட்டுக் கட்டுதல் கூடாதென்று ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். அது சட்டமாகிவிட்டால் கனம் ராமசாமி நாயக்கரும், கனம் வரதராஜலு நாயடுவும் சொல்லுகிற கோவில் குருக்கள் அக்கிரமங்களுக்கும் சட்டமாக்க வேண்டும். அப்படி ஆக்கினால் இந்து மதத்திற்குக் கெடுதல் என்று சுயராஜ்யக்கக்ஷி மூக்கியஸ்தரான கனம் சத்தியமூர்த்தி அய்யர் சொல்லுகிறார். ஸ்ரீமதி முத்துலக்ஷ்மியம்மாளவர்களிடம் தாசிகள் வந்த பொழுது சத்தியமூர்த்தி அய்யருமிருந்தாராம். அப்பொழுது அய்யர் தாசிகளைப்பார்த்து, இரண்டு பெண்கள் இருந்தால் ஒரு பெண்ணுக்கு பொட்டும் ஒரு பெண்ணுக்கு விவாகமும் செய்து வைப்பீர்களாவென்று சமரசப்படுத்தினார். தாசிகளும் முத்துலக்ஷ்மியம்மாளும் ஒத்துக்கொள்ளவில்லை. இந்த இடத்தில் தான் பாப்பானின் சாமர்த்தியம். பார்ப்பவர்களுக்கு ஞாயமாகத் தோன்றவேண்டும். எப்பொழுதும் இரண்டு கட்சியிருக்கவேண்டும். ஒரு கட்சிக்குத்தான் வலியப்போயேனும் சாந்தமாகப்பேசி மற்றவன் பேரில் பழியைச் சுமத்தி விவகாரத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அதனால் கூடுமான லாபத்தை யடையவேண்டும். அது தப்பினால் கோர்ட்டிலாவது தன் கூட்டத்தாரிடம் போய்ச் சேரவேண்டும் என்பது அவர்கள் குலத்தொழில். இந்த ஒரு தொழிலில் தான் [illegible]சொல்லும் பாரம்பராவாசனை இருக்[illegible]லும். எந்தத் தொழிலிலும் நாலு பா[illegible] பிழைப்பு கெடுவதாயிருந்தால் மதம் [illegible]போய் விடும் என்று சொல்லாத இடமேய[illegible]. பாப்பான் பிழைப்பிற்கே இந்து மதம் ஏற்பட்டிருக்கிறதென்பது இங்குகூடவா விளங்கவில்லை? இந்து மதம் சீர்திருந்த மடையாமல் சமூக முன்னேற்றமடையாது, சமூகம் முன்னேற்றமடையாமல் சுயராஜ்யம் வராது. இந்து மதம் சீர்திருத்தமடைய வேண்டுமானால் சில பாப்பானின் புறட்டுப்பிழைப்பு ஒழிய வேண்டும். எந்த பாப்பானின் புரட்டுப் பிழைப்புங் கெட எந்த ராஜீயக் கக்ஷிப்பாப்பானும் சம்மதிப்பதுமில்லை. அவனுடைய மோச புத்தியை தெரிந்து கொள்ள ஜன சமூகங்களுக்கு அக்கரையுமில்லை. சில படித்தவனும் சில பணக்காரனும் அவர்களுடைய பகட்டுவார்த்தைக்கும் முன்னணி மரியாதைக்கும் பாப்பாரைத்தாங்கி நிற்பது மாறுவதுமில்லை. தப்பித்தவறில் யாராவது ஜனசமூகங்களுக்கு உள்ளதை உள்ளபடி சொன்னால் [illegible] தேசத்துரோகி என்றும் மதத்துவேஷி என்றும் திட்டுவதற்குப் பார்ப்பனரல்லாத கூலியாட்களைக் கூடவே வைத்திருக்கிறார்கள்.

சீர்திருத்தமென்று சொல்லி ஒரு ஜாதியாரைத் தங்கள் இருப்பிடத்தை விட்டு கிளப்பிப் படித்த வகுப்பினர் மத்தியில் கொண்டு விட்டு அவர்களை துயரங்களுக் குட்படுத்துவது அவ்வளவு சரியல்ல என்று படித்த பாப்பார வக்கீல்களில் சிலர் கும்பகோண பிர்யஞான சங்கத்தின் ஆதரணையில் பேசுவதாக பத்திரிகையில் படிக்கிறோம். இந்த மாதிரி பேசுவது ஆழ்ந்த கருத்தோடும் சரியான ஞாயமாகவும் நினைத்தே பேசுகிறார்கள். ஆனால் தங்களைப்பற்றி அவர்கள் நினைப்பதில்லை. படித்த கூட்டத்தார்கள் படிக்காத கூட்டத்தார்களையும் தங்களோடு சேர்த்து அவர்கட்கும் அறிவை உண்டாக்க வேண்டுமென்பது எல்லா தேசத்திற்கும் எந்த படித்த கூட்டத்தாருக்கும் ஞாயமாக முடிந்த விஷயம். பாப்பார படித்த கூட்டத்தார்களோ, படிக்காத கூட்டத்தார்கள் இருந்த இடத்திலேயே இருக்கட்டு மென்கிறார்கள். வெள்ளைக்காரர்களும் இவர்களைப்போலவே சொல்லு

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க).

# திருவள்ளுவரும் தமிழரும்.

(சிதம்பரனார் எழுதுவது).

நமது செந்தமிழ்நாட்டுப் பழம் பெரியாராகிய திருவள்ளுவரின் பெயரைக் கேட்டறியாத கற்றறிந்த தமிழர்கள் இல்லையென்றே கூறலாம். அவர் பெயர் பலருக்குத் தெரிந்திருப்பினும், அவர் கொள்கைகளையும், உபதேசங்களையும் அறிந்திருப்பவர் மிகச் சிலரே. அவர்களிலும் திருவள்ளுவர் கொள்கைகளை உண்மையாக அறிந்திருப்பவர் மிக மிகச் சிலர். திருவள்ளுவர் வரலாறு இன்னதென்பதை நாம் திட்டமாகத் தெரிந்துகொள்ள முடியாது. அவரைப்பற்றி வழங்கும் கதைகள் உண்மையென்று கொள்ளமுடியாத வகையில் அமைந்திருக்கின்றன. ஔவை, உப்பை, உறுவை, வள்ளி, கபிலர், அதிகமான், திருவள்ளுவர் ஆகிய எழுவரும் ஆதியென்னும் ஆதிதிராவிடப் பெண்ணிற்கும், பகவன் என்னும் பார்ப்பனருக்கும் பிறந்ததாகவும், அவர்கள் பிறந்த குழந்தைகளைப் பிறந்த இடத்திலேயே இரக்கமின்றி எறிந்துவிட்டுச் சென்றதாகவும் கதை கூறப்படுகின்றது. இக்கதை உ[illegible]தென்பதை, உப்பை, உறுவை, வள்ளி[illegible]களுடைய காலம் இன்னதென்று திட்டம[illegible]ரியாமையாலும், ஔவை, கபிலர், அதிகமா[illegible]இவர்களுடைய காலங்கள் ஒன்றற்கொன்று மாறுபடுவதாலும், இந்தக் கட்டுக் கதையையும், திருக்குறளைச் சங்கத்தில் அரங்கேற்றியதாகக் கூறப்படும் கட்டுக் கதையையும் மறந்துவிட்டுப் பார்த்தால் திருவள்ளுவர் காலம் இன்னதென்றே தெரியாமையாலும், அறியலாம்.

எந்தக்கதை எப்படியிருந்தாலும், திருவள்ளுவர் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்நாட்டில் தமிழ்க் குடியிற் பிறந்த ஒரு பெரியாரென்பதையும், அவருக்கு இணையான அறிஞர்கள் இவ்வுலகில் வேறு ஒருவரும் இல்லையென்பதையும், அவருடைய உபதேசங்கள் உலகமக்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததாகுமென்பதையும் ஒருவரும் மறுக்க முடியாததாகும். தமிழ்நாட்டிற் பிறந்த ஒரு பெரியாரின் சிறந்த நூலைப் பயில்வதால் தமிழரின் பண்டைக்கால ஒழுக்கத்தையும், நாகரிகத்தையும், கொள்கைகளையும் (மதங்களையும்) அறிந்து கொள்ளலாம். திருவள்ளுவர் கூறியிருப்பது முழுவதும் தமிழர்களின் கொள்கைகளே என்று கூறுவாரும் நம்புவாரும் பலருண்டு. ஆனால் பார்ப்பனத் தமிழறிஞர்கள் பலரும் திருவள்ளுவரின் சீரிய நூலைக்கண்டு, வட. மொழியில் அத்தகைய நூல் இல்லாதிருப்பதை எண்ணி, அது வடமொழியிலிருந்து வந்ததாகக் கூறுவர். ஆனால் இக்கூற்று முழுதும் பொய்க்கூற்றாகும். திருவள்ளுவர் கூறின அனைத்தும் தமிழர் கொள்கையே என்று கூறுவதும் முழுதும் உண்மையன்று. திருவள்ளுவர் நூலிலும், ஆரியக் கொள்கைகள் கலந்துவிட்டன என்பதைத் தமிழர்கள் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்திலேயே பாழும் பார்ப்பனீயம் சிறிது புகுந்திருக்கின்றது உண்மையென்றால், அதற்கும் பிற்பட்ட திருக்குறளில் பார்ப்பனீயம் சிறிது நுழைந்திருக்கின்றதென்று கூறுவதற்காக யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லையன்றோ?

நமது அருமைத் திருக்குறளிலேயே பார்ப்பனீயம் நுழைந்திருக்குமாயின், பார்ப்பனீயத்திலேயே மூழ்கிக்கிடந்தவர்களாலும், பார்ப்பனீயமே சிறந்ததென்று எண்ணியிருந்தவர்களாலும், எழுதப்பட்ட அதன் உரைகளால் திருவள்ளுவரின் உண்மைக் கொள்கைகள், அதாவது தமிழரின் உண்மைக் கொள்கைகள், மேகத்தால் சூழப்பட்ட சந்திரனைப்போல் மறைபட்டுக் கிடக்கின்றனவென்பது உண்மையன்றோ? இப்பொழுது எல்லோராலும் சிறந்ததாகக் கொண்டாடப்படும் பரிமேலழகரின் உரையில் தமிழரின் உண்மைக் கொள்கைகள் எவ்வளவோ மறைபட்டுக் கிடக்கின்றன. பரிமேலழகரின் சிறந்த அறிவையும், பெருமையையும் நாம் குறைகூறவில்லை. உரைசெய்யுந் திறமையிலும் பரிமேலழகர் மற்றெவருக்கும் இளைத்ததாகக் காணமுடியாது. ஆயினும், அவர் திருக்குறளில் உள்ள பொருள்கள் வடமொழியிலிருந்து வந்தனவென்ற கொள்கையைப் பலவிடங்களில் நிலைநாட்ட முயலுகின்றார். வருணாச்சிரம தருமத்தின் தோற்றமே திருக்குறளில் காணப்ப[illegible]திருக்க, அதனைத் திருவள்ளுவரும் ஒப்பு[illegible]ண்டார் என்று தமிழர் நினைக்கும்படி செய்வதற்குப் பெரிதும் முயல்கின்றார். தமிழர்கள் கொடுத்திருந்த பெண்களுரிமையை அழிப்பதற்கும் முயலுகின்றார். சமஸ்கிருத நூல்களுக்கும், பார்ப்பனக் கொள்கைகளுக்கும், உயர்வு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடனே திருக்குறளுக்கு உரையெழுதிச் செல்லுகின்றனர். பரிமேலழகர் உரை திருக்குறளுக்குச் சிறந்ததாயிருப்பினும், தமிழர் கொள்கைகளை மறைப்பதன் மூலமாகப் பெருந்தீங்கு விளைத்திருக்கின்றதைத் தமிழரின் உண்மை நாகரிகத்தை யறிந்தவர்கள் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆகவே திருக்குறளைப் பயிலுகின்றவர்கள் அதற்கு இப்பொழுதுள்ள பார்ப்பனீய உரைகளைத் துணையாக வைத்துக்கொண்டு, தங்கள் சொந்த அறிவினாலேயே பொருளைத் தெரிந்து கொள்ளவேண்டும். அதற்கு பழந்தமிழ் நூல்களின் பயிற்சியும், பழந்தமிழரின் கொள்கைகளும் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

திருவள்ளுவர் தமது நூலில் பல விடங்களில் [illegible]ரியக் கொள்கைகளை மறுத்துக் கூறுவதை வெளிப்படையாகக் காணலாம். பெரும்பாலும் திருவள்ளுவர் கூறுவன மனச்சாட்சிக்கும், உண்மையறிவுக்கும், யுக்திக்கும், இயற்கை அன்புக்கும் இயைந்ததாகவே காணப்படும். திருவள்ளுவரோ எப்பொழுதும் அறிவுக்குப் பொருத்தமான பொருள்களையே நம்புங் குணமுடையவர். மற்றவர்களையும் அதையே நம்பும்படி கூறுகிறார். இதனை

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப் [பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."

என்னும் ஒருகுறளிலேயே அறிந்துகொள்ளலாம். இத்தகைய சிறந்த நூலின் உண்மைப் பயிற்சி குறைந்தநாள் தொடங்கியே தமிழரின் வீரமும், சுயமரியாதையும், பெருமையும் குறைவதாயிற்றென்பதை யாவரும் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆகவே மீண்டும் தமிழர் வீரமும், சுயமரியாதையும், சுதந்தரமும், பெருமையும் அடையவேண்டுமாயின், தங்களின் பண்டைக்கால நாகரிகத்தை உண்மையாக அறிந்துகொள்ளவேண்டும். அவற்றை அறிவதற்குக் கருவியாயிருப்பது திருக்குறள் ஒன்றேயாகும். இதனைத் தமிழர்களறியாமல் அன்னிய மொழிகளையும், அதில் உள்ள நூல்களையும், பயில முற்படுவதும், அந்நியர் நமது நாட்டிற் புகுந்து தங்கள் நூல்களையும், மொழிகளையும் பயிலுமாறு தமிழர்களை வற்புறுத்துவதும் மானக்கேடான செயலன்றோ? உதாரணமாக நம் நாட்டிற்கு பணம் திரட்டவந்த ஆங்கிலேயர் நம்மை ஆங்கிலம் கற்கச் செய்யவில்லையா. தென்னாட்டிற் சுற்றிப் பணந் திரட்டவந்த திரு. காந்தியவர்கள் பகவத் கீதையையும், சமஸ்கிருதத்தையும், இந்தி மொழியையும் பயிலுமாறு வற்புறுத்த வில்லையா? இது "தாய் தஞ்சாவூரில் தட்டுப் பிச்சையெடுக்கின்றாள், குமாரன் கும்பகோணத்தில் கோதானம் செய்கின்றான்" என்ற முதுமொழிக்குப் பொருத்தமாகவில்லையா? தமிழர் தங்கள் மொழியிலும், நூல்களிலும், பயிற்சியும் பற்றும் இல்லாதிருக்கும்போது அவர்கள் தலையில் அந்நிய பாஷைகளையும் நூல்களையும் கட்டிச் சுமக்க வைப்பது எவ்வளவு பெரிய சூழ்ச்சியாகும். இதற்குத் தமிழர்கள் இடங்கொடுப்பது முறையா? ஆகவே நாமும் திருக்குறள்பற்றிப் பிரசாரம் செய்யவேண்டியது அவசியமன்றோ? எங்ஙனம் பார்ப்பன தேசாபிமானிகள் சமயம் வாய்த்தபோது பார்ப்பனக் கொள்கைகளைப் பிரசாரம் செய்கிறார்களோ அதுபோலவே தமிழ்த் தேசாபிமானிகள் அனைவரும் திருக்குறள் பிரசாரத்தையும், தமிழ்ப் பிரசாரத்தையும் மேற்கொள்ளவேண்டிய கடமை அவர்கள் மீது சுமந்திருக்கின்றதென்பதை நினைவூட்டுகின்றோம்.

நமது தமிழ் மொழியில், வடமொழியில் இருப்பதுபோல் அபூத கற்பனைகளும், கதைகளும் அடங்கிய நூல்கள் கிடையா. தமிழ் மொழியில் காணப்படும், புராண நூல்களும், மதநூல்களும், வடமொழிப் பயிற்சியும், ஆரிய மத நுழைவும், ஏற்பட்ட பின்னரே பார்ப்பனீயத்தில் மூழ்கிய தமிழராலும் ஆரியர்களாகிய தமிழ்ப்போர்வை போர்த்தியவர்களாலும் எழுதப்பட்டனவாகும்; பண்டைக்கால நூல்களாகிய புறநானூறு பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் பார்ப்பனீயத்தை மிகுதியாகக் காண முடியாது. தமிழர்கள் தங்கள் நூல்களில் உலக வாழ்க்கையைத் திறமையுடன் நடத்துவதற்குரிய செய்திகளையே விரித்துக் கூறியிருக்கின்றார்கள். தமிழர்கள் தங்களுக்குத்தெரியாத பொருள்களைப்பற்றிப் புனைந்து கூறும் வழக்கம் உடையவர்கள் அல்லர். இதனை தமிழ் நூல்கள் கூறும் அறம், பொருள், இன்பம், என்னும் மூன்றுமே வற்புறுத்தும். ஆரியர்களோ, வீடு என்பதை எடுத்துக்கொண்டு மோட்சம், நரகம் என்ற வார்த்தைகளையும் எங்கும் வரச்செய்து பல நூல்களையாக்கி தம்போன்ற மக்களையெல்லாம் தமக்குக் கீழ்ப்பட்டவர்களாக்கிக்கொள்ள சூழ்ச்சி செய்வார்கள். இதனைத் திருக்குறளைக்கொண்டு நன்கறியலாம். அறத்தையும், பொருளையும், இன்பத்தையுந்தான் இவ்வுலகில் மக்களடையமுடியும்: வீடு என்பது இறந்தபின் அடையக்கூடியதாகும். இறந்தபின் அடையக்கூடிய செய்தியை இருக்கும்போது கண்டறிவது உண்மையாக விருக்க முடியாது. அவரவர்கள் தத்தம் மனத்துக்குத் தோன்றியவற்றைக் கூறுவதாகத்தான் பாமர மக்கள் நம்பவேண்டி வரும். நமது திருக்குறளில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றைப்பற்றித்தான் கூறப்படுகின்றது. இம்மூன்றை பற்றியே அறத்துப்பால், பொருட்பால் காமத்துப்பால் என மூன்று பகுதியாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் வீட்டைப்பற்றியும், திருக்குறளில் கூறப்படுவதாக பலர் கூறுகின்றதற்குக் காரணமென்னவென்றால் இம்மூன்றையும் திருவள்ளு

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க]

# பட்டுக்கோட்டையில் சுயமரியாதைப் பிரசாரம்.

# ஈ. வெ. ராமசாமி நாயக்கரின்

## சொற்பொழிவு.

நவம்பர் 7உ காலை 7-மணிக்கு ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், சின்னையா பிள்ளை, 'தொழிலாளி' ஆசிரியர் தண்டபாணி செட்டியார், லிங்கம் முதலானோர்கள் தஞ்சையிலிருந்து மோட்டாரில் பட்டுக்கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். திரு. நாயக்கர் பட்டுக்கோட்டைக்கு வருகிறார் என்ற விஷயத்தைக் கேட்டு வந்தலைக்காடு ஸ்ரீமான்கள் பெ. நா. ஏகாட்சி தேவர், ஆ. ராமசாமி சேர்வை, குருவிக்கரம்பை வ. சி. சுப்பையா தேவர், மூ. வீ. நடேச தேவர், பேராவூரணி கருப்பையாத் தேவர், வீராசாமித் தேவர், ஆததானூர் வீரப்ப அம்பலகாரர் முதலியோர்களும் இன்னும் சுற்று கிராமங்களிலிருந்து பல பிரபலஸ்தர்களும் திரு. நாயக்கரின் பிரசங்கத்தைக் கேட்க வந்திருந்தனர். மோட்டார் பட்டுக்கோட்டை வந்து சேர்ந்ததும் அவ்வூர் பொது ஜனங்கள் திரு. நாயக்கரையும், சின்னையா பிள்ளை முதலானோர்களை அன்புடன் வரவேற்று முன்பே தயாரிக்கப்பட்டிருந்த ஜாகைக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் பல பண்டிதர்களும் பெரியோர்களும் சுயமரியாதை இயக்கம் முதலிய விஷயங்களைக் குறித்து திரு. நாயக்கருடன் வெகு நேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். திரு நாயக்கர் அவர்களுடைய கேள்விக்கெல்லாம் தெளிவாகப் பதிலளித்தார்கள் மாலை 5-மணிக்கு ஸ்ரீமான் சின்னையா பிள்ளையின் தலைமையில் ஒரு பெருங்கூட்டம் கூடியது அவ்வமயம் 'தொழிலாளி' ஆசிரியர் தண்டபாணி செட்டியார், தாலூகா போர்டு தலைவர் ஸ்ரீ நாடி முத்துப்பிள்ளை, ஜில்லா போர்டு மெம்பர் வேணுகோபால் நாயுடு முதலிய பல பிரமுகர்கள் கூட்டத்துக்கு விஜயம் செய்திருந்ததுடன், சுமார் ஆயிரம் ஜனங்களுக்கு மேல் கூடியிருந்தனர். வழக்கப்படி கடவுள் வணக்கத்துடன் சபை ஆரம்பமாயிற்று.

பின்னர் தலைவர் சின்னையா பிள்ளை பலத்த கரகோஷத்தினிடையே எழுந்து பேசுகையில், "திரு. தண்டபாணி செட்டியார் என்னை தலைவர் ஸ்தானத்துக்குப் பிரேரேபிக்கையில், என்னைப் பெரிய தனவந்தன் என்றும், அறிவில் சிறந்தவனென்றும் இன்னும் பல அடைமொழிகளால் என்னை உயர்த்திப் பேசினார், அத்தகைய தகைமைகள் என்னிடத்தில் இல்லையென்றே நான் கூறவேணதில்லால் அவர் என்பால் கொண்டுள்ள அன்பு, சிநேகிதம் இவற்றைக் கொண்டே பேசியதற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். இதற்குமுன் என்னைப் பிரேரேபித்தவர் தேசவிடுதலைக்காக மிகவும் பாடுபட்டவர்கள் என்று சொன்னார்கள். அத்தகைய தொண்டுகளால் எவ்வளவு பிரயோஜனமுமில்லையென்று கண்டு நம்மக்களுக்கு சுயமரியாதையும், சகோதரத்துவத்தையும் உண்டுபண்ணக்கூடிய இயக்கத்தை ஆரம்பித்து அதற்காக இச்சுயமரியாதை இயக்கத்தை ஆரம்பித்து பல விடங்களிலும் பிரசாரம் செய்து வருகிறோம். இவ்விஷயத்தைக் குறித்து இன்றைய உபந்யாசகர் திருவாளர் நாயக்கர் வெகு விரிவாகவும், தெளிவாகவும் பேசப்போவதால் நான் உங்கள் அரிய நேரத்தை வீணாக்கப் போவதில்லை" யென்று கூறி முடித்து பின்னர் திரு. நாயக்கரைப் பேசும்படி கேட்டுக்கொண்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

பின்னர் திரு நாயக்கர் பலத்த கரகோஷத்தினிடையே எழுந்து பேசுகையில் "நான் இவ்வூருக்கு இதற்குமுன் இரண்டு தடவை வந்திருக்கிறேன். இது மூன்றாம் தடவை. தலைவர் சொல்லியபடி நான் இச்சுயமரியாதை இயக்கத்தைக் குறித்து பல விடங்களில் பேசி வருகிறேன். நாம் உண்மையில் விடுதலை பெற்று வாழ விரும்புவோமானால் சுயமரியாதை உணர்ச்சி நமக்கு வேண்டும். மற்ற நாடுகளில் விடுதலை பெற்று வாழும் மக்களிடம் சுயமரியாதை உணர்ச்சியே மிகுந்திருக்கிறதென்பதைச் சரித்திர வாயிலாகக் காணலாம். மற்ற நாடுகள் 300 அல்லது 400 வருஷங்களுக்கு மேல் அடிமைப்பட்டு சுயமரியாதை கெட்டுவாழ்ந்து வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் நாம் பல ஆயிரவருஷங்களாக விடுதலையின்றி அடிமைகளாகத்தான் இருந்து வந்திருக்கிறோம் என்பது நன்கு விளங்கும். முன்னர், சுமார் 500 வருஷங்களுக்கு முன் வெள்ளையர்கள் இருந்த நிலைமையையும் இப்போது அவர்களிருக்கும் நிலைமையையும் கவனிக்கையில் அவர்கள் எவ்வளவு மாறுதலடைந்து வந்திருக்கிறார்கள் என்பது விளங்கும். இவர்கள் அக்காலத்தில் நம்மைவிட பக்தி, மூடக்கொள்கை முதலிய படுகுழிகளில் ஆழ்ந்து கிடந்தார்கள். நாம் நம் நாட்டில் நாகரிகம் படைத்திருந்த காலத்தில் அவர்கள் காட்டு மிராண்டிகளாக, மீன், நண்டு, புழு பூச்சி முதலியவைகளைப் புசித்துக்கொண்டு அநாகரீகர்களாகத் திரிந்துகொண்டிருந்தார்கள். அத்தகைய ஜாதியார்கள்தான், நம்மை அநாகரிக முள்ளவர்கள் மிலேச்சர்கள் என்று பலவகை மொழிகளை நம்மீது சாற்றி இழிவுபடுத்தி அடிமைகளாக்கி ஆண்டுவருகிறார்கள். பல நூற்றாண்டுகளாக நாம் அடிமைக் குழியிலேயேயிருந்தும், நாம் விழித்தெழுந்து நமது குறைகளைத் தீர்த்துக்கொள்ள முன்வரவில்லை. சுயராஜ்யம், விடுதலை என்று தான் கத்திக்கொண்டிருக்கிறோம்; இப்படியெல்லாம் நாளுக்கு நாள் பலமாகக் கிளர்ச்சிசெய்து கொண்டும் கூக்குரல் செய்து கொண்டு வந்தும் நாளுக்குநாள் நாம் பின்னேக்கியே செல்கின்றோம். இத்தகைய கூக்குரல்களைக் கேட்டுக் கேட்டு எதிரிகள் விழித்துக்கொண்டு விட்டார்கள்.

இதற்கெல்லாம் காரணம் நமது மதந்தான். மதசம்பந்தமான மூடக் கொள்கைகள், அசட்டுத்தன்மை, குருட்டுத்தனம் முதலியவைகளால் நாம் இவ்வளவு கேவலஸ்திதிக்கு வந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மதஸ்தர்களையும் எடுத்துக் கொண்டால் அந்தந்த மதஸ்தர்களுக்குத் தங்களுக்கென ஆள தேசமிருப்பதல்லாமல் சில மதஸ்தர்கள் பிறநாட்டையும் ஆண்டுவருகிறார்கள்; நாம் நம்முடையநாட்டையாவது ஆள சக்தியில்லாவிட்டாலும் அடிமைகளாகவாவது இல்லாமல் இருக்கின்றோமா என்று பாருங்கள்! நேற்றுதோன்றிய மதங்களெல்லாம் தங்களுடைய மதஸ்தர்களை ஆண்டுவரும்பொழுது நம்முடைய மதஸ்தர்கள் தான் நம்மை ஆண்டுகொள்ள முடியாமல் அடிமைகளாயிருக்கின்றனர். நமது மதம் எத்தனையோ கோடி வருஷங்களுக்கு முன் கடவுளால் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. நம்முடைய மதத்திலுள்ள கொள்கைகளும், குருட்டுத்தனங்களும், நாம் அக்கொள்கைகளைப் படிக்கக்கூடாது என்பன போன்ற நிபந்தனைகளுந்தான் நம்மை இக்கதிக்கு கொண்டுவந்து விட்டுவிட்டன என்று சொல்வேன் நம் ஹிந்துமதம் என்றுசொல்லும் மதத்தை சற்று ஆராய்வோம். முதலில் ஹிந்து என்கிற வார்த்தையே நம்முடைய வார்த்தையல்ல. அவ்வார்த்தை நம்முடைய புராண ஆகமம் முதலியவைகளில் எங்கேனும் சொல்லப்பட்டிருக்கின்றதா என்று பார்த்தால் இல்லவே இல்லை. எங்கிருந்தோ அந்த ஹிந்து என்ற வார்த்தை நம்முடைய மதத்துக்குப் பெயராக புகுந்து விட்டது. நம் நாட்டு மதத்துக்கும் பழக்க வழக்கங்களுக்கும் பெயர் நம்முடைய பாஷையில் அன்றோ இருக்கவேண்டும் அப்படிப் பார்த்தால் 'ஹிந்து' என்னும் வார்த்தையே நம்முடைய பாஷையில் கிடையாது. 'ஹிந்து' என்னும் பதத்துக்கு என்ன பொருள் என்று கேட்டால் ஒருவருக்குமே தெரியாது. இப்படிப்பட்ட மதத்தை கடவுளால் ஏற்படுத்தப்பட்ட மதம், பெருமைகளையும் அற்புதங்களையும் உடையது என்று நம்மவர்கள் பெருமை பேசிக்கொள்கின்றனர். நேற்றைக்குப்போய் மற்றொரு மதத்தில் சேர்ந்த ஒருவனைக் கேட்டால் தன்னுடைய மதம், கொள்கை, தத்துவம் முதலியவைகள் இன்னின்னவென்பதை உடனே கூறிவிடுவான். அவன் தீண்டாதவனாயிருந்தாலும் அம்மதத்தில் மற்றவர்களுக்குரிய சமத்துவம் சகோதரத்துவம் முதலிய சகல உரிமைகளும் தாராளமாய் வழங்கப்படுகின்றன. அவர்களுடைய வேத புஸ்தகங்கள் பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப் பட்டு இலவசமாய் மக்களுக்கு மூலை முடுக்குகளிலும் கொண்டுவந்து கொடுக்கப்படுகின்றன. ஆனால் நம்முடைய மதத்துக்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா வென்று ஒருவரைக் கேட்டால் அவருக்கு ஒரு ஆதாரமே கிடையாது என்று

தான் சொல்வார். ஏனென்றால் ஹிந்து மதத்துக்கு ஆதாரம் என்று சொல்லப்படும் ஆகமம் புராணம் வேதம் முதலியவைகளை ஒரு சாரார் தவிர மற்றவர்கள் படிக்கக்கூடாது, கேட்கக்கூடாது, மீறிச் செய்தால் நாக்கை அறுத்துவிட வேண்டும், காதில் ஈயத்தைக் காய்ச்சிவிட வேண்டுமென்று பல நிபந்தனைகளை நம்மதத்தில் ஏற்படுத்தியிருக்கின்றனர். இம்மாதிரியான மதத்தை ஒப்புக் கொள்கிறவன் அனுஷ்டிக்கிறவனை அறிவாளியென்றாவது யோக்கியன் என்றாவது சொல்லக்கூடுமா? இனி வேதங்களை ஒப்புக் கொள்கிறவர்கள் என்றே வைத்துக் கொள்வோம். அப்படியானால், எத்தனையோ கொள்கைகளையும், பெருமைகளையுமுடைய ஒருமதம் மக்களுக்கு எவ்வளவு தூரம் கல்வி, அறிவு முதலிய துறைகளில் எவ்வளவு நன்மை செய்திருக்கிறதென்பதைப் பாருங்கள்! இவ்வளவு காலமாக இருந்து வந்த ஒரு மதத்திலுள்ள மக்களில் 100-க்கு 5 பேருக்குக் கூட கையெழுத்துப்போடத் தெரியாது. இன்னும் மற்ற மதஸ்தர்கள் தங்களுடைய மதத்தைப்பற்றி எவ்வளவு தூரம் பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள். நாம் எவ்வளவு தூரம் பிரசாரம் செய்து வந்திருக்கிறோமென்றும் கவனியுங்கள்! மற்ற மதஸ்தர்கள் தங்களுடைய மதத்தின் பேரால் எவ்வளவு செலவு செய்துவருகிறார்களென்று பார்த்தால், நாம் செலவு செய்வதில் 20-ல் ஒரு பங்குகூட அவர்கள் செய்வதில்லை. நம்முடைய ஹிந்துக் கோவில்களுக்கு வருஷத்தில் எவ்வளவு வருமானம் வருகிறதென்று பார்த்தால் அக்கோவில்களின் கணக்குகளிலிருந்தே விளங்கும். லக்ஷம் லக்ஷமாக வந்து குவிகின்றன. நமது சென்னை மாகாணத்தில் மட்டும், கோவில்களின் வருமானம் இரண்டுகோடி ரூபாய் என்று சர்க்கார் கணக்கு வைத்திருக்கிறார்கள். இன்னும் ஸ்தல யாத்திரைக்காரர்களின் செலவு தான் என்ன! கோவில் கணக்குகளைப் பார்த்தால் அரிசி, உப்பு, புளி, பாதம்பருப்பு, திராக்ஷை முதலியவைகள் தான் இவ்வளவுஇவ்வளவு என்று எழுதிவைக்கப் பட்டிருக்கிறது. இதையெல்லாம் சமையல் பண்ணி சாப்பிடுகிறவர்கள் யாரென்று பாருங்கள். இவ்விதம் ஒருவழியில வீண் செலவு நடத்து கொண்டிருக்கையில் நம் நாட்டில் விவசாயம் கைத்தொழில் முதலியவைகளை விருத்திசெய்வதற்கு பணமில்லையென்று அழுதுகொண்டிருக்கிறோம். இவ்விதம் கோவில்களில் செலவாகும்செலவுகளை யாராவது கவனித்தார்களா? இதை கவனிக்கத்தான் இந்துமதபரிபாலன போர்டார் சட்டம் செய்தார்கள். மற்ற மதஸ்தர்கள் இங்ஙனம் கோவில்களில் வீண் செலவுசெய்யாமல் மக்களின் கஷ்டநிவர்த்திக்கும் அறிவை விருத்திசெய்யப் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தி மக்களை மேன்மேலும் அபிவிருத்தியடையச் செய்கின்றார்கள்.

இனி நம்மதத்தின் பெயரால் நம்மை அடிமைப் படுத்துவதும் விடுதலையடையத் தடையாயிருப்பதுமான நமது மதச்சடங்குகளைக் கவனிப்போம். கருத்தரித்த நாள் முதல்கொண்டு, கட்டையில் வைத்தற்குப் பின்னும் கற்பகோடி வருஷங்கள்வரை சடங்குகள் தோன்றிவிடுகின்றன. அர்த்தமற்ற, நிபந்தனையற்ற சடங்குகளின் பேரால் புரோகிதப் பார்ப்பானும், பஞ்சாங்கப் பார்ப்பானும் பொய்யும் சூதுகளையும் சொல்லி பணம் பறித்துச் செல்கின்றார்கள். கலியாண காலங்களிலும், கருமாதி காலங்களிலும், புரோகிதப் பார்ப்பானும் அரிசி, பருப்பு, இலை முதலியவைகள் மூட்டை மூட்டைகளாக பறித்துக் கொண்டு செல்கின்றார்கள். ஒருவனுடைய மரணத்துக்குப் பின்னும், அவனை மோட்ச லோகத்துக்கு தான் அனுப்பி விடுவதாக அவனுடைய குடும்பத்தார்களிடம் பொய் வார்த்தைகள் கூறி வருஷா வருஷம் பணம் பறித்துக் கொண்டு செல்கின்றனர். இதெல்லாம் நமது மூடக்கொள்கையும் மூடத்தன்மையுமன்றோ! ஆகையால் இப்புரோகித மதத்தை ஒழித்தாலன்றி நாம் ஒருநாளும் முன்னேற முடியாது. மற்ற நாடுகளில் பிற மதஸ்தர்களும் தங்களுடைய புரோகித மதத்தை ஒழித்த பின்புதான் அந்நாட்டு மக்கள் விடுதலையடைந்திருக்கின்றனர்.

இனி மதாச்சாரியர்கள், குருமார்கள் முதலியவர்களைக் கவனிப்போம். இவர்கள், குதிரை பல்லக்கு முதலியவைகளைப் போட்டுக் கொண்டு கொள்ளைக்காரர்கள் போல ஊர் ஊராய் வந்திறங்கி அங்குள்ள உத்தியோகஸ்தர்கள், மிராசுதார்களின் செல்வாக்கை அனுகூலமாகக் கொண்டு மூட்டை மூட்டையாக பணத்தைப் பலரிடமிருந்து பறித்துக் கொண்டு செல்கின்றனர். இவர்கள் சொல்லி வாங்கும் வகைகளுக்காவது அப்பணத்தைச் செலவு செய்கின்றார்களா பாருங்கள். இல்லையே. அத்தகைய மடாதிபதிகள் குருமார்கள் பணத்தைக் கொண்டுபோய் என்ன செய்கிறார்கள். அவர்கள் யோக்கியதை என்ன? அவர்கள் நமக்கு என்ன உபதேசம் செய்கின்றார்கள் என்பதையே நாம் கவனிப்பதில்லை. இவர்களெல்லாம் குலகுருக்களென ஆடம்பரத்துடன் எவ்வித யோக்கியதையும் இலட்சணங்களுமின்றி ஊர் ஊராய் கப்பிரமாய் வருகின்றனர். இவர்களிடம் அயோக்கியத்தனமே நிறைந்திருக்கிறது.

இனி நாம் வணங்கும் தெய்வங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். சில்லரைத் தேவதைகளெனப் பெயர்பெற்ற மாடன் கருப்பன் முதலிய சாமிகளுக்கு கள் சாராயம் முதலியவைகளை வைத்து ஆராதனை செய்து வருகிறோம். இனி பெரிய தெய்வங்களையுடைய கோவில்களுக்குப் போய்ப் பார்த்தால் அங்கு தாசிகளை நடனமாடச் செய்திருப்பது முதலிய ஆபாசமான பழக்கங்களை உண்டுபண்ணி ஆடம்பரமான வகைகளில் வீணாக விரயம் செய்யப்படுகிறது.

இனி நம் ஹிந்து மதஸ்தர்கள் அணிந்து கொள்ளும் சின்னங்களின் அர்த்தமென்னவென்று கேட்டால் ஒருவருக்கும் ஒன்றுமே தெரியாது. இதை எல்லாம பொது ஜனங்களுக்கு உணர்த்த எவரேனுமிருக்கின்றனரா?

இம்மாதிரியான அர்த்தமற்ற சடங்குகள் மூடக்கொள்கைகள் முதலிய ஊழல்களால் எத்தனை ஆயிரம் ஜனங்களை நாம் பிற மதங்களுக்குப் பலி கொடுத்திருக்கின்றோம் என்று கவனியுங்கள். ஒரு ஹிந்து அரசால் ஆளப்படும் திருவாங்கூர் ராஜ்ஜியத்தில் சுமார் 35 வருஷங்களுக்குமுன் இருந்த மூன்று லக்ஷம் கிறிஸ்தவர்கள் இப்போது 15 லக்ஷமாகப் பெருகி விட்டனர். இப்படி நாம் நமது மதத்தின் பேரால் பலரை அன்னிய மதங்களுக்கு அனுப்புவதல்லாமல் ஆயிரக்கணக்கான நமது சகோதரர்களை உயிருடனேயே சனீஸ்வரர்களாகிய பிராமண எமன்களுக்கு ஆளாகும்படி செய்துவருகிறோம்.

இனி மதத்தின் பெயரால் சிறு பெண்களைக் கோவில்களில் பொட்டுக் கட்டி விபசாரத்துக்கு விட்டு வைப்பதைத் தடுக்கும் பொருட்டு சென்னை சட்ட சபையிலும் வெளியிலும் பலத்த கிளர்ச்சி செய்யப்பட்டது. இதைப்பெரும்பாலோரான பிராமணரல்லாதார் ஆதரித்தும் சத்தியமூர்த்தி போன்ற பிராமண அரசியல் தலைவர்கள் தேவ தாசிகளைக் கோவில்களில் பொட்டுக்கட்டி வைப்பது மத சம்பந்தம் என்று அதை எதிர்த்து பிரசங்கங்கள் செய்தனர். இவர்களெல்லாம் போலிகளென்றும், வயிற்றுப்பிழைப்பின் பொருட்டு பணம் பறித்துத் தின்று திரிபவர்கள் என்றும் தான் சொல்லுவேன். இதனால் தான் ஸ்ரீ. மேயோ போன்ற பிறநாட்டார்கள் நம்மை இழிவு படுத்தி புஸ்தகம் எழுத இடமேற்படுகிறது. அதனால் நாம் இப்போது அனுஷ்டித்து வரும் மதம், மூடக்கொள்கை ஆகியவைகள் ஒழிந்தால் தான் நாம் க்ஷேமமடைவோம். இத்தகைய சடங்குகளும், கிரியைகளும் செய்து பணத்தைச் செலவிட்டும் நம் மதஸ்தர்களுக்குள் ஒருவருக்கொருவர் கட்டுப்பாடு சிறிதேனும் உண்டா? இல்லையே. கட்டுப்பாடு இல்லாமற் போய் விட்டதுடன் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வும் நமது மதம் கற்பிக்கிறது. உண்மையான ஒற்றுமையும் கட்டுப்பாடும் இல்லாமல் மக்களை ஏமாற்ற நம் நாட்டில் போலி ஒற்றுமைப் பிரசங்கங்கள் காங்கிரஸ் பெயராலும், மற்றும் ஸ்தாபனங்கள் பெயராலும் எங்கு பார்த்தாலும ஆகாயம் அளாவும் படி ஒலிக்கின்றன. இனி போலிப் பிராமணர்கள் ஊளையிடும் சுயராஜ்யத்தைப்பற்றி சிறிது ஆராய்வோம். சுயராஜ்யம் என்றால் என்ன? அதை நாம் அடைய யோக்கியதை உள்ளவர்களா? நமக்குள் ஒருவருக்கொருவர் ஒற்றமை, சமத்துவம், சகோதரத்துவ முதலிய சகல உரிமைகளையும் அன்னியோன்யமாய் அனுபவிக்கிறோமா என்று பார்த்தால் நம்மை ஆளும் வெள்ளைக்காரர்கள் இந்நாட்டில் இருந்தால் போதும் என்று தான் சொல்ல வேண்டிவரும். இத்தகைய நிலையில் நாம் இருக்கும்போது இதற்கு முன் இரண்டு சுயராஜ்யம் வந்து விட்டுப் போய் விட்டது. மூன்றாவது சுயராஜ்யமும் 3 மாதக் கர்ப்பமாக இருக்கிறது. இதற்கு முன் வந்த சுயராஜ்யத்தால், 3 மந்திரிகளும், 3 நிர்வாக உத்தியோகஸ்தர்களும் 5 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் ஏற்படுத்தப்படுத்தப்பட்டிருக்கின்றனர். இவர்களுடைய சம்பளச் செலவுகளுக்கெல்லாம் குடியானவர்கள், மிராசுதார்கள், ஜமீன்தார்

(இதன் தொடர்ச்சி 11 பக்கம் பார்க்க)

# ராயல் கமிஷனை பஹிஷ்கரிப்பது எதற்காக?

அடங்கிக் கிடந்த அரசியல் உலகத்திற்கு இரண்டு விஷயங்கள் கிடைத்துவிட்டன. ஒன்று, மறுபடியும் பெசண்டம்மை ஆதிக்கம், இரண்டு ராயல் கமிஷனை பஹிஷ்கரிப்பது.

இந்த வியாசத்தில் இரண்டாவதான ராயல் கமிஷன் பஹிஷ்காரத்தைப் பற்றியே பேசுவோம்.

எதற்காக ராயல் கமிஷனை பஹிஷ்கரிப்பது?

1. ராயல் கமிஷனில் இந்தியர்கள் நியமிக்கப் படவில்லை என்பதற்காகவா?

2. அல்லது இது சமயமல்ல என்பதற்காகவா?

3. அல்லது கமீஷன் நியமித்து பரீக்ஷை செய்து சீர்திருத்தம் கொடுப்பது இந்தியருக்கவமானம் என்பதற்காகவா?

4. கமிஷனில் நியமிக்கப்பட்ட கனவான்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் அல்ல என்பதற்காகவா?

என்று பார்ப்போமானால் ஒவ்வொரு தலைவர்கள் என்போர்கள் ஒவ்வொரு விதம் சொல்லுகிறார்கள்.

தலைவர்கள் அறிக்கை என்பதில்,

வெள்ளைக்காரர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்றும், இந்தியர்களின் யோக்கியதையை ஆராய பார்லிமெண்ட் கமீஷன் நியமித்தது இந்தியாவின் சுயமரியாதைக்கு விரோதமென்றும்,

ராயல் கமிஷன் என்பதே இப்போது மாத்திரமல்ல எப்போதுமே வேண்டாம் என்றும்,

இக்கமிஷனில் இந்தியர்களுக்கு இடமளிக்காததால் இந்தியர் கமீஷனை பஹிஷ்கரிக்க வேண்டும் என்றும் எழுதி,

ஸ்ரீமதி பெசன்ட் கூட்டத்தாராகிய ஸ்ரீமான்கள் பி. சிவ ராவ், எம். எஸ். மாதவராவ், ஸ்ரீராம் டிலாங்கு, ஜீனராஜ தாசர், ஸ்ரீமதி ஜீனராஜ தாசா ஆகியவர்களும்,

பார்ப்பனர் கூட்டத்தாராகிய ஸ்ரீமான்கள் எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் எ. ரங்கசாமி அய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி, எம். கே. ஆசாரியார் ஸி. வி. வெங்கிட்டரமண அய்யங்கார் வி. எஸ். ராமசாமி சாஸ்திரி கே. சீனிவாசய்யங்கார் வி. ராமதாஸ் கே. ஆர். வெங்கிட்டராமய்யர் கி. ஆர். பார்த்தசாரதி அய்யங்கார் ஆகியவர்களும்

பார்ப்பனரல்லாதாரில் ஸ்ரீமான்கள் ஷாபி மகமது சாயபு, சாமி வெங்கடாசலம் செட்டியார் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அப்துல் அமீத் கான், வி. எம். முத்துரங்க முதலியார் ஸி. எஸ். கோவிந்த ராஜுலு முதலியார் சாவடி சுப்பரமணிய பிள்ளை ஆகியவர்களுமே யாவார்கள்.

இதில் கண்ட கனவான்களிடத்தில் யாரிடத்திலாவது தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலாவது தமிழ் மக்களுக்கு இவர்களது அரசியல் கொள்கையில் யாருக்காவது நம்பிக்கையுண்டா.

அல்லது கையொப்பம் போட்ட தலைவர்கள் என்பவர்களில் யாருக்காவது அரசியலில் ஒரு குறிப்பிட்ட கொள்கையுண்டா?

அல்லது இவர்களில் யாராவது கொஞ்ச நாளைக்காவது மாறுதல் இல்லாமல் எதாவது ஒரு கொள்கையைப் பிடித்து நடப்பதுண்டா?

இந்தக் கூட்டத்தில் எத்தனை பேருக்கு அரசியலில் சொந்த புத்தி யுண்டு?

எத்தனைபேர் ஜீவனத்திற்காக அரசியலில் இருக்கின்றவர்கள்?

எத்தனை பேர் இனியும் கூலி பொங்கிக்கொண்டு அரசியலில் கலந்திருக்கின்றவர்கள்?

இந்தக் கூட்டத்தாரை நம்பி பஹிஷ்கார இயக்கத்தில் மக்கள் சேருவதென்றால் அவர்கள் எவ்வளவு அறிவிலிகளாக இருக்கவேண்டும்? நாளை யத்தினம் ஸ்ரீமதி பெசண்டம்மையையாவது சீனிவாசய்யங்காரையாவது சாப்ருவையாவது சிவசாமி அய்யரையாவது கமிஷனில் சேர்த்துக் கொள்ளப்பட்டாய்விட்டது என்கின்ற ஒரு அறிக்கை வெளியானால், இந்த பஹிஷ்கார அறிக்கைக்கு கையெழுத்துப் போட்டவர்கள் எவ்வளவு மதிப்பு கொடுப்பார்கள்.

சேலம் மகா நாட்டில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு பிரதிநிதித்துவமுள்ள இந்தியர்களை கமிட்டிகளில் சேர்க்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிக்கொண்டார். ஆகவே அவருக்கு கமிஷன் நியமிப்பது சம்மதம் என்றும் அதன் ரிபோர்ட்டுகளை ஒப்புக்கொள்ளத் தயார் என்றும் தானே அருத்தம். நிபந்தனையெல்லாம் ஒரு சரியான இந்தியப்பிரதிநிதியை சேர்த்துக்கொள்ளவேண்டியதுதானே தவிர வேறு ஏதாவது உண்டா? இப்பொழுது பார்லிமெண்டார் ஒரு சரியான பிரதிநிதியின் பெயரை சொல்லு என்று கேட்டால் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு பெயரைச் சொல்லத் தயாராயிருக்கிறாரா? சரியான பிரதிநிதியார் என்பது ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்காவது தெரியுமா என்று கேட்கிறோம். ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்காரை நியமித்துவிட்டால் ஸ்ரீமான்கள் ஷாபி மகமது, எ. ரங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி, பார்த்தசாரதி அய்யங்கார், முத்துரங்க முதலியார், கோவிந்த ராஜுலு முதலியார் ஸி. வி. வெங்கிட்டரமண அய்யங்கார், ராமதாஸ் முதலிய அய்யங்கார் சிஷ்யர்கள் எல்லோருக்கும் திருப்தியாகி கமிஷனுடன் ஒத்துழைக்க ஆரம்பித்து விடுவார்களா இல்லையா? ஸ்ரீமதி பெசண்டம்மையை கமிஷனில் நியமித்துவிட்டால் ஸ்ரீமான்கள் சிவராவ் ஜினராஜதாசா, மாதவராவ், ஸ்ரீராம் ஸ்ரீமதி ஜினராஜதாச முதலியவர் அம்மையார் இஷ்டப்பட்டால் எல்லோருக்கும் திருப்தி ஏற்பட்டு கமிஷனுடன் ஒத்துழைக்க ஆரம்பித்து விடுவார்களா? இல்லையா? ஆகவே இப்போது பஹிஷ்காரத்தின் தத்துவம் என்ன என்பதைப்பற்றி வாசகர்களையே யோசித்துப்பார்க்கும் படி வேண்டுகின்றோம்.

இந்திய அரசியலை ஒரு பித்தலாட்டக் கூட்டம் தங்கள் கையில்வைத்துக்கொண்டு பாமர மக்களை களிமண் உருண்டைகளைப்போல் ஆட்டுகின்றது.

நாட்டில் மக்கள் இடையில நடத்தப்பட வேண்டிய காரியங்கள் எவ்வளவோ பாக்கி இருக்கும் போது அதை சற்றும் கவனியாமல இம்மாதிரி ஜால வித்தைகளில் தலைவர்கள் என்போர் காலத்தைக் கழிக்கிறார்கள். ஒத்துழையாமையை அழிப்பதற்கு இதேபார்ப்பனர்கள் எவ்வளவு பித்தலாட்டங்களும், சூழ்ச்சிகளும் செய்தார்கள் என்பதை யோக்கியர்கள் அதற்குள் மறந்து இவர்களை நம்பி விடுவார்களா?

சட்ட சபையில் போய் முட்டுக்கட்டை போடுவது என்றும், அங்கு ஒத்துழையாமை செய்வது என்றும் சட்டசபை படிச்சிலவையுங்கூட வாங்குவதில்லை யென்றும், வெள்ளைக்காரர்கள், அதிகாரிகள், வீட்டு விசேஷங்களுக்குக் கூட போவதில்லையென்றும், எந்த தீர்மானத்தையும் எதிர்ப்பதென்றும் எவ்வளவு பேசினார்கள். இந்தப் புரட்டர்களடங்கின சுயராஜ்யக்கட்சியை இந்த ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடும், கல்யாணசுந்தர முதலியாரும் எவ்வளவு ஆதரித்தும் அவர்களுக்கு ஆக்கம் தேடியும் கொடுத்தார்களே. இப்போது அதெல்லாம் என்ன ஆச்சுது. "கோழி திருட்டுக்கொடுத்தவன் அழுகிற கூட்டத்தில் கோழி திருடினவனும் சேர்ந்து கொண்டு அழுவது போல்" இப்போது நம்முடன் சேர்ந்துகொண்டு சுயராஜ்யக் கட்சி, அயோக்கியக் கட்சி என்று சொல்லிக்கொண்டு திரிகின்றார்களே ஒழிய கடுகளவாவது தாங்கள் செய்த குற்றத்திற்கு வெட்கப்படுகின்றார்களா? எனவே இக்கூட்டத்தை நம்பி இவர்களைப் பின்பற்றலாமா என்றுதான் கேட்கின்றோம்.

புத்தியுள்ள ஒவ்வொருவருக்குமே ராயல் கமிஷனை என்ன செய்வது என்பது தெரியும். பெரும்பான்மையான மக்களுக்கும் யாரைப்பின்பற்றுவது என்பதும் நன்றாய் தெரிந்து வருகின்றது. ஆகவே பாமரமக்கள் இக்கூட்டத்தை நம்பி ஏமாந்து போகக்கூடாதென்பதை மாத்திரம் இதுசமயம் கவலையுடன் எச்சரிக்கின்றோம்.

## குர் ஆன் ஷரீபை பறிமுதல் செய்ய வேண்டுமாம்!

### அகில இந்திய ஆரியர் மகா நாட்டுத் தீர்மானம்.

நவம்பர் 4 தேதி டில்லியில் கூடிய அகில இந்திய ஆரியர் மகாநாட்டில் லாலா ஹன்ஸ்ராஜ் அவர்கள் தலைமையில் நிறைவேற்றப் பட்ட பல தீர்மானங்களில் குரான் ஷரீபை பறிமுதல் செய்யவேண்டும் என்று செய்திருக்கும் தீர்மானம் பரிகாசத்திற் கிடமானது. மானிட வர்க்கத்தின் சமத்துவத்திற்கும், ஒற்றுமைக்கும், சுயமரியாதைக்கும் குரான் ஷரீபைவிட என்ன மதநூல் இருக்கிறது. மக்களை மூட நம்பிக்கையில் ஆழ்த்தி உயர்வு தாழ்வு கற்பித்து, பார்ப்பனர் மாத்திரம் வயிறு வளர்க்கும்படியான தந்திரமும், சூழ்ச்சியும், சுயநலமும் நிரம்பிக்கிடக்கும் ஆரிய வேதம், சாஸ்திர, புராண கட்டுக்கதைகளைவிட குரான் ஷரீபு எந்த விதத்தில் தாழ்ந்தது.


சகோதரத்துவம், சமத்துவம், ஒற்றுமை சுதந்திரம், சுயமரியாதை முதலியவைகளை வளர்க்கவேண்டிய அறிவுக்குப் பொருத்தமான கொள்கைகளையே பிரும்புமே கொண்டதான குரான் ஷரீபைப் பறிமுதல் செய்ய மறு அதர்ம சாஸ்திரத்தையும், வருணாசிரம அதர்மத்தையும், போதிக்கும் ஆரியப்புரட்டுக் கூட்டத்தாருக்கு என்ன அதிகாரமிருக்கிறது.

ஆரியர் வேதமென்பதும் மநுதர்மசாஸ்திரமும், பராசர ஸ்மிருதியும் ராமாயணமும் பாரத புராணங்களும் பறிமுதல் செய்யப் பட்டு ஒழிந்து போகுமானால் உலகத்திற்கே விடுதலை உண்டாகிவிடும். ஆதலால் இவைகளைவைத்துக்கொண்டு குரான ஷரீபை பறிமுதல் செய்யவேண்டுமென்கிறவர்கள் சந்தனத்தை விட்டு சாணியைப் பூசிக்கொள்ளுகின்றவர்களே ஆவார்கள்.

சமரச சன்மார்க்கி.

### மதுரையில் சுயமரியாதைச் சங்கம்,

1927 ஆம் நவம்பர் மாதம் 13-ம்தேதி மதுரை சுயமரியாதை நண்பர்களின்கூட்ட மொன்று திருவாளர் பிச்சைமுத்துக்கோனார் அவர்கள் மேல் மாடியில் கூடியிற்று. திருவாளர் எஸ் ரங்கசாமி நாயுடு அவர்கள் தலைமை வகித்தார். மதுரை ஜில்லா சுயமரியாதைச் சங்கம் ஒன்று 'குடி அரசு'ப் பத்திராதிபர் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் கொள்கையை அநுசரித்து ஸ்தாபிக்கப்பட்டது.



அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞு கார்த்திகை 5-௳

## கார்ப்பரேஷனும் வகுப்பு வாதமும்.

சென்னையில் 16—11—27 தேதி நடந்த கார்ப்பரேஷன் (முனிசிபல் சபை) தலைவர் தேர்தலில் வகுப்பு வாதம் என்ன என்பதும் அது யாரிடத்தில் இருக்கின்றது என்பதும் நன்றாய் விளங்கிவிட்டது. இனி மேல் கடுகளவு அறிவுள்ளவருக்கும் கூட அதைப்பற்றி எவ்வித சந்தேகமுமிருக்க நியாயமில்லை என்றே எண்ணுகின்றோம். சென்னை கார்ப்பரேஷன் தலைவர் தேர்தலை நினைத்த உடனே இந்த வருஷம் பார்ப்பன ரல்லாதார் கக்ஷியாராகிய ஜஸ்டிஸ் கக்ஷிக்கும் மெஜாரிட்டி இல்லை என்றும் பார்ப்பன கக்ஷியாகிய சுயராஜ்ஜியக் கக்ஷிக்கும் மெஜாரிட்டி இல்லை என்றும் கருதியே வெள்ளைக்கார கவுன்சிலர்களுடைய தயவுஇருந்தால்தான் எந்தக் கக்ஷியாரும் வெற்றிபெற முடியும் என்கின்ற எண்ணத்தின்பேரில் இரு கக்ஷியாரும் வெள்ளைக்கார கௌன்சிலரை அணுகி கெஞ்சிப் பார்த்தார்கள். வெள்ளைக்காரர், இவர்கள் இருவருடைய யோக்கியதையும் பார்த்து தனித் தனியே இருகக்ஷித் தலைவரையும் தங்கள் தங்கள் அரசியல் கொள்கையைப்பற்றி தங்கள் முன் பிரசங்கம் செய்யச்சொன்னார்கள். அதற்கும் உடன்பட்டு பார்ப்பனரல்லாதார் கக்ஷிக்காக பணகால் ராஜாவும், பார்ப்பனக் கக்ஷிக்கு ஸ்ரீமான்கள் சாமி வெங்கடாசலமும் சத்திய மூர்த்தியும் போய் ஐரோப்பியர்கள் முன்னிலையில தங்கள் தங்கள் கொள்கையைப் பற்றி பேசினார்கள் பேசியதில் இவ்விரு கக்ஷியாரும் ஒருவருக்கொருவர் பயந்து கொண்டு ஒருவர் பேரில் ஒருவர் குற்றம் சொல்ல இடம் ஏற்பட்டதே ஒழிய ஒருவர் காரியமும் பலிக்கவில்லை. கடைசியாக வெள்ளைக்காரர்கள், சட்ட மெம்பர் சர். ராமசாமி அய்யர் பேச்சையும் மகா கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரி பேச்சையும் அட்வகேட் ஜனரல் ஸ்ரீ. வெங்கட்டராம சாஸ்திரி பேச்சையுமே கேட்டுக்கொண்டு மிதவாதிகள் என்கின்ற கலப்படமில்லாத பிராமணக்கக்ஷி காரிய தரிசி ஸ்ரீமான் ஜி. ஏ. நடேசய்யருக்கே ஓட்டுக் கொடுப்பது என்று தீர்மானித்துக் கொண்டார்கள். இந்த விஷயம் அறிந்த ஜஸ்டிஸ் கக்ஷியார் சுயராஜ்ஜியக் கக்ஷியாருக்கு இடங்கொடுத்தாவது வெள்ளைக்காரருக்கு புத்தி கற்பிக்க வேண்டுமென்கின்ற எண்ணத்தின் மீது சுயராஜ்ஜியக்கக்ஷித் தலைவரான ஸ்ரீமான் சாமி வெங்கடாசலத்திடம் வலுவில் சென்று வெள்ளைக்காரர்களுக்கு வெற்றியுண்டாவதைவிட சுயராஜ்ஜியக் கக்ஷிக்கு வெற்றி உண்டாவதில் எனக்கு ஆட்சேபனை இல்லையென்றும், அதிலும் சுயராஜ்யக் கட்சித் தலைவர் பார்ப்பனரல்லாதவராய் இருப்பதால் அத்தலைவருக்கு தங்கள் கட்சியார் ஓட்டுக்கொடுப்பதில் எவ்வித ஆட்சேபனையுமில்லை என்றும், அதனால் சாமி வெங்கிடாசலம் செட்டியார் திறப்பதில் தாங்கள் மனப்பூர்வமாய் ஆதரிக்கத் தயாரா யிருப்பதாகவும் அதற்காக சுயராஜ்யக் கட்சியிடமாவது ஸ்ரீ சாமி வெங்கிடாசலம் செட்டியாரிடமாவது எவ்விதபிரதிப்பிரயோஜனமும் எதிர்பாராமல் எவ்விதநிபந்தனையுமின்றித் தாங்கள் அனுகூலமாயிருப்பதாகவும் தெரிவித்துக் கொண்டார்கள் அப்படியிருந்தும்பார்ப்பனர்கள் இதைஒப்புக் கொள்ளாமல் கட்சி தத்துவத்தையும் எதிர் பாராமல் வெள்ளைக்காரர்களின் அகம்பாவத்தையும் லக்ஷியம் செய்யாமல் எப்படியாவது ஒரு பார்ப்பனர் கார்ப்பரேஷனுக்கு தலைவரானால் போதும் என்கின்ற எண்ணத்தின்பேரில் ஜஸ்டிஸ்கக்ஷியார் வலியவந்ததையும் உதைத்துத்தள்ளி விட்டு பார்ப்பனர்களுக்கு எவ்வளவோ அடிமையாயிருந்து பழி பாவங்களுக்கு அஞ்சாமல் பார்ப்பனர்களையே நம்பி அவர்கள் வாலைப் பிடித்துக்கொண்டே திரிந்த ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியாரையும் தங்கள் கக்ஷி அபேக்ஷகராய் நிறுத்தாமல் ஒரே அடியாய் வகுப்பு வாதிகளாய் நின்று விட்டார்கள். இதன் பலனாய் பார்ப்பனக் கக்ஷியில் இருந்த சில பார்ப்பன ரல்லாதாருக்கு கண் விழிப்பு ஏற்பட்டு சுயராஜ்ஜியக் கக்ஷியில் உள்ள பார்ப்பனருக்கு எப்படி கக்ஷிக்கொள்கையைவிட பார்ப்பனருக்கே ஓட்டுக்கொடுப்பது முக்கியம் எனப்படாகத் தோன்றுகிறதோ அது போலவே அக்கக்ஷியில் உள்ள பார்ப்பனரல்லாதாருக்கும் அவரவர்கள் இஷ்டப்படி ஓட்டு செய்யும் சுதந்திரம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இந்த சுதந்திரம் கொடுக்க மறுத்தால் சில பார்ப்பனரல்லாதார் சுயராஜ்ஜியக் கக்ஷியை விட்டு ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்து விடுவார்கள் என்கின்ற பயத்தால் அம்மாதிரி அவரவர்கள் இஷ்டப்படி ஓட்டுக் கொடுக்க அனுமதி கொடுத்து விட்டார்கள். இதன் பலனாய் ஜஸ்டிஸ் கக்ஷியிலிருந்தே தலைவர் பதவிக்கு ஒரு கனவானை நிறுத்தவேண்டிய அவசியம் சுயராஜ்ஜியக் கக்ஷி பார்ப்பன ரல்லாதாருக்கும் ஏற்பட்டு விட்டது.

இவர்களை நம்பி ஜஸ்டிஸ் கக்ஷியாரும் தங்கள் கக்ஷியிலிருந்து ஸ்ரீமான் திவான் பகதூர் ஜி. நாராயணசாமி செட்டியாரை நிறுத்தினார்கள். அவ்வளவும் தெரிந்து பார்ப்பனர்கள் வெள்ளைக்காரர் தயவுக்கும், சட்ட மெம்பர், அட்வகேட் ஜனரல், சிலஹைகோர்ட் ஜட்ஜிகள் முதலியவர்கள் சிபார்சுக்கும் கட்டுப்பட்டு பல பார்ப்பனரல்லாதார் தங்களுக்கு ஓட்டுச் செய்வார்கள் என்கின்ற தைரியத்தின்பேரில் ஸ்ரீமான் G. A. நடேசய்யர் அவர்களை நிறுத்தினார்கள். கடைசியில் ஓட்டு எடுக்கும்போது பார்ப்பனரல்லாத கவுன்சிலர்கள் 32 பேர்களில் 28 பேர்கள் ஒரே அடியாய் பார்ப்பன ரல்லாதாருக்கே அதாவது திவான் பகதூர் நாராயணசாமி செட்டியாருக்கே ஓட்டுக் கொடுத்தார்கள் இதில் சுயராஜ்ஜியக் கக்ஷியைச் சேர்ந்த பார்ப்பனரல்லாதாரிலும் சுமார் 8 பேர்கள் இருந்தார்களென்றே சொல்ல வேண்டும் ஆனால் பார்ப்பன அபேக்ஷகருக்கு கவுன்சிலுள்ள 6 பார்ப்பனர்களும் கவுன்சிலில் உள்ள 8 வெள்ளைக்காரர்களும் ஒரே அடியாய் ஓட்டுச் செய்தார்கள். மேல்கொண்டு நான்கு பேர் யார் என்று பார்ப்போமானால் அவர்களில் இரண்டு மகமதியர்களும், மற்றும் ஒரு நாட்டுக்கோட்டை செட்டியாரும் ஒரு கிருஸ்தவருமாகவும் இருக்கக்கூடுமென்றே அநுமானிக்கப் படுகிறது. எனவே, வகுப்பு வாதம் என்பது பார்ப்பனர்களிடமும் வெள்ளைக்காரர்களிடமும் இருப்பது போன்று பார்ப்பன ரல்லாதாரிடமாவது அதற்குட் பட்ட மகமதியரிட மாவது கிருஸ்தவர்களிடமாவது அவ்வளவு பலமாய் இருக்கின்றதா என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது. தவிர சுயராஜ்ஜியக் கக்ஷியை இதுவரையில் பார்ப்பனக் கக்ஷி என்று சொல்லி வந்ததில் ஏதாவது ஆக்ஷேபனை உண்டா என்பதும், வெள்ளைக்காரரும் பார்ப்பனர்களும் சேர்ந்து நமது நாட்டை கொள்ளை அடிப்பதுதான் அரசாங்கமாகவும் அரசியல் இயக்கமாகவும் இருக்கின்றது என்று சொல்ல வந்ததில் ஏதாவது தப்பு இருக்கின்றதா என்றும் கேட்கின்றோம்.

ஸ்ரீமான் G. A. நடேசய்யருக்கு ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, E. L. அய்யர், புரா சத்திய நாராயணய்யர், K. பாஷ்யம் அய்யரவர்கள், டாக்டர் மல்லையா, டாக்டர் நாராயணராவ் ஆகிய ஆறு பார்ப்பனர்களும் ஒருங்கே ஓட்டுசெய்யவேண்டிய அவசியம் என்ன என்று கேட்கின்றோம்.

ஜி. எ. நடேசய்யரின் அரசியல் கொள்கை என்ன என்று பார்த்தால், ஜஸ்டிஸ் கட்சியைவிட எந்த விதத்தில் தீவிரமானவர்? சுமார் 10 வருஷத்திற்கு முன்வரையில் ஸ்ரீமான் ஜி. எ. நடேசய்யரை கவர்மெண்டு ஒற்றர் என்று இந்தப்பார்ப்பனர்களே சொல்லிக்கொண்டு திரிந்தது என்ன ஆச்சுது? தவிர, வெள்ளைக்காரருக்கு ஸ்ரீ நடேசய்யர் எந்த விதத்தில் இப்போது மேலானவர் என்று சொல்லக்கூடும்? சென்ற வாரத்தில்தானே ஸ்ரீமான் ஜி. எ. நடேசய்யர் ராயல் கமிஷனை பஹிஷ்கரிக்கவேண்டும் என்று பேசியதும் பஹிஷ்கார கக்ஷியில் சேர்ந்திருக்கின்றார். ஆகவே இதில் வகுப்புவாதமில்லாமல் வேறு என்ன தத்துவம் இருக்கின்றது? ஸ்ரீமான் சத்தியமூர்த்தி

அய்யர். வெள்ளைக்காரக் கூட்டத்தில் பேசும்போது, சுயராஜ்யக்கக்ஷியார் யோக்கியர்கள் என்றும், ஜஸ்டிஸ் கக்ஷியார் சுயராஜ்யக் கக்ஷியைவிட அமிதவாதிகள் என்றும், உதாரணமாக கோயமுத்தூர் மகாநாட்டில் எல்லாக் கக்ஷியை விட அமிதவாதக் கொள்கையை உடையதான இரட்டை ஆக்ஷி ஒழியும் வரை பதவி ஏற்பதில்லை என்று தீர்மானம் செய்திருக்கின்றார்கள் என்றும் சாடி சொல்லிக் காட்டிக் கொடுத்ததிலிருந்தே ஜஸ்டிஸ்கட்சி ராஜீய அபிப்பிராயம் வெள்ளைக்காரருக்கு தத்துப் பிள்ளைகள் அல்ல என்பதைக்காட்டும். இப்படியெல்லாம் இருப்பதை ஜனங்கள் தெரிந்துகொள்ளச் சக்தியில்லை என்கின்ற எண்ணத்தின் பேரில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி என்ன என்னமோ கொண்டி சமாதானம் சொல்லுகிறார். சுயராஜ்யகட்சி தங்கள் கட்சியில் இருந்து தலைவர் ஸ்தானத்திற்கு ஆபேட்சகர் நிறுத்தாததற்குக் காரணம், அடுத்த வருஷம் வரி அதிகப் படுத்தவேண்டும் என்பதற்காக கெட்ட பெயர் வந்து விடுமோ என்று பயந்து விட்டார்களாம். இது யோக்கியமான காரியமாகுமா? அப்படி அதிகமாக்கவேண்டிய அவசியமிருந்தால் அதிகப்படுத்துவதில் ஆக்ஷேபனை என்ன? ஆகவே இந்த தைரியமும் பகுத்தறிவும் இல்லாத கட்சி வேறு என்ன காரியம் செய்யமுடியும்? எனவே ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் பார்ப்பனரல்லாததால் நிறுத்தப்படவில்லை என்று சொல்லிவிட்டால் விவகாரம் ஒருவழியில் தீர்ந்துவிடும். அப்படி இல்லாவிட்டால் பார்ப்பனவண்டவாளம் மேன்மேலும் வெளியாகுமேயல்லாமல் நன்மை ஒன்றும் உண்டாகாது. இதுவரை இப்பார்ப்பனர்கள் எத்தனை பார்ப்பனரல்லாதாரை இம்மாதிரி செய்தார்கள் என்பதற்கு எவ்வளவு சாக்ஷி வேண்டும்.

பழய சங்கதிகளை விட்டு விட்டாலும் சமீப சம்பவங்களை கவனித்தால் அதுவே போதும் என்று நினைக்கின்றோம்.

காங்கிரசிலிருந்து ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாய்க்கர், பி. வரதராஜுலுநாயுடு, திரு. வி. கல்யாண சுந்தர முதலியார், ஆகியோர் களை காங்கிரசை விட்டு வெளியாக்கி காங்கிரசை சுத்தப்படுத்தவேண்டும் என்று சொன்னதும், ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாய்க்கர் காங்கிரஸ் கமிட்டியில் இருக்க யோக்கியதை இல்லை என்று சொல்லி விட்டதும், ஸ்ரீமான் வி. சக்கரைசெட்டியாரை விரட்டி விட்டதும், ஸ்ரீமான் ஆரியாவை விரட்டிவிட்டதும், ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களையும் ஆரியாவையும் சிறையில் வைக்கவேண்டும் என்று என்று சர்க்காரை வேண்டிக்கொண்டதும், ஸ்ரீமான் ஜார்ஜ் ஜோசப்பை மதுரை தேர்தலில் நடத்தியதும், ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரை நடத்தியதும் ஸ்ரீமான் எஸ். முத்தய்யாமுதலியாரை நடத்தியதும், இப்போது திரு. சாமி வெங்கிடாசலம் செட்டியாரை நடத்தியதும், யோசித்தால் விளங்காமல் போகாதா என்று கேழ்க்கின்றோம்.

---

## ஸ்ரீமதி
## பெசண்டம்மையார்.

ஸ்ரீமதி பெசண்டம்மையார் நாம் முன் நினைத்தது போலவே திக்குவிஜயம் செய்யப் புறப்பட்டு விட்டார்கள். அவர் செல்லுமிடங்களிலெல்லாம் பார்ப்பன சூழ்ச்சியின் வரவேற்புகளும் உபசாரங்களும் தடபுடலாக நடைபெறுவதாக விளம்பரமாகி வருகின்றது. இந்த சமயத்தில் எதற்காக பெசண்டம்மையாரை பார்ப்பனர்கள் விளம்பரப்படுத்துகிறார்கள் என்பதை கடுகளவு புத்தியுள்ள பார்ப்பனரல்லாதாரும் உணரக்கூடும். ஆனால் பார்ப்பனரல்லாதார்களில் முனிசிபாலிட்டி, தாலூகா போர்டு முதலிய ஸ்தானங்களில் பதவிவகிக்கும் சுயமரியாதை அற்ற பலர் இப்பார்ப்பன சூழ்ச்சிக்கு அநுகூலமாய் இருப்பது நமக்கு மிகவும் அவமானமாக இருக்கின்றது. அநேக பார்ப்பனரல்லாதார்கள் கொள்கையே இல்லாமல் இரண்டு பக்கமும் வாயை வைத்துக்கொண்டு தம்முடைய வாழ்வையே பிரதானமாகக் கருதி திரியும் இழிதன்மை மாறினாலொழிய பார்ப்பனரல்லாதாருக்கு சுயமரியாதை ஏற்படுவதென்பது கனவேயாகும். ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் பதவி கிடைக்கும் வரை தான் பார்ப்பனரல்லாதார் என்றும், பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு பாடுபடுகின்றவனென்றும், பார்ப்பன அக்கிரமங்களை அடக்கவே இப்பதவிகளுக்கு ஆசைப்படுகிறேன் என்றும், சொல்லிக்கொண்டு பல்லைக்காட்டி பதவிபெற்றதும் பெற்றதாயை துரோகம் செய்வது போல் தன்னையும் பரிசுத்தப்பார்ப்பான் என்று நினைத்துக்கொண்டு பார்ப்பனக்கூட்டத்திற்கு வால் பிடிப்பதில் பந்தயம் போட்டு முந்த ஆரம்பித்து விடுகிறார்கள். இதைப்போல் சிறுமைக்குணம் வேறு கூட்டத்தில் இருப்பதாக நாம சொல்லமுடியாது. என்ன காரியத்திற்காக முனிசிபாலிட்டிகளும்போர்டுகளும் பெசண்டம்மையாருக்கு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்க வேண்டும்? அவ்வம்மையார் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்குசெய்த நன்மையென்ன? அவ்வம்மையாரின் நாணயம் என்ன? அபிப்பிராயம் என்ன? இனியும் அவ்வம்மையார் செய்யப்போகும் காரியமென்ன? ஒன்றையுமே கருதாமல் இம்மாதிரி காரியங்கள் செய்வதால் இம்மாதிரி பார்ப்பனரல்லாதார் தங்களுக்குசுயபுத்தியும் சுயமரியாதையும் பகுத்தறிவும் இருப்பதாக எப்படி சொல்லிக்கொள்ள முடியும்? ஒருசிறு பார்ப்பனப் பிள்ளையைக் கூட்டிக் கொண்டு லோகதுரு வந்துவிட்டார் லோக குரு வந்து விட்டார் என்று பார்ப்பனர்களைவிட மோசமாய் ஏமாற்றுவதும், தினம் பரமாத்மாக்களுடனும் மகாத்மாக்களுடனும் பேசுவதாக வேஷம் போடுவதுமாகிய வழிகளில் பார்ப்பன மதத்தை பிரசாரம் செய்வதும், இவ்வளவும் அல்லாமல் அரசியலிலும் மிகவும் மோசமாக நடந்து ஒத்துழையாமையின் போது எதிர்பிரசாரம் செய்ததும், பஞ்சாப் அக்கிரமங்களைப்பற்றி பொது ஜனங்களுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாய் வெள்ளைக்காருடன் சேர்ந்து கொண்டு, "பஞ்சாப்காரர்கள் வெள்ளைக்காரர் மேல் செங்கல்லை எறிந்ததற்கு வெள்ளைக்காரர்கள் பீரங்கி மூலமாகவும் ஆகாசக்கப்பல் மூலமாகவும் ஈயக்குண்டையும் வெடிக்குண்டையும் எறிந்தது மிகவும் சரி யென்றும் சொல்லி, வெள்ளைக்காரர்களை ஆதரித்ததுடன், இன்னமும் தன்கோஷ்டி முழுவதையும் விட்டு வெள்ளைக்காரருக்கு உதவியும் செய்யச் சொல்லி இருக்க, இப்போது திடீரென்று எவ்விதத்தில் அம்மையாருக்கு தேசாபிமானமும் இந்தியாபிமானமும் வந்துவிட்டது என்று கேட்கின்றோம்.

இந்தம்மையாரை இப்போது நடத்துகின்றவர்கள் யார் என்பதும் அம்மையார் பிரசாரம் இன்னதுதான் என்பதும், யாருக்குத்தான் தெரியாது என்று சொல்ல முடியுமா?

ஸ்ரீமான்கள் ஏ. ரங்கசாமி அய்யங்காரும் சத்திய மூர்த்தி அய்யரும் மறைமுகமாயிருந்து கொண்டு நடத்துகின்றார்கள். அம்மையின் பிரசாரமெல்லாம் பார்ப்பன மதப் பிரசாரமும் பார்ப்பனரல்லாதாரை ஏமாற்றுவதுமேயாகும். அதோடுகூடவே வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப்பற்றி ஆக்ஷேபிப்பதுமாகும். இந்த நிலைமையில் உள்ளவர்களை பார்ப்பனர்கள் வரவேற்கவும், பூரணகும்பமெடுக்கவும் மற்றும் படம் வைத்து பூஜிக்கவும் கடமைப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் பார்ப்பனரல்லாதார் எதற்காக இதில் சேருகின்றார்கள் என்பது தான் நமது கேள்வி.

ஆதலால் இனியாவது ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாதார் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து நடந்து கொள்ளுவார்கள் என்று நினைக்கின்றோம்.

---

## "தமிழ் நாடு"

தமிழ்நாடு பத்திரிக்கையானது மறுபடியும் சென்னை பார்ப்பன தெய்வங்களுக்குள் இரண்டறக்கலந் நிர்மானித்து விட்டதாக நினைக்கவேண்டி இருக்கிறது. அதின் முழுக்கவனம் ராயல் கமிஷனை பஹிஷ்கரிப்பதில் மாத்திரம் இல்லாமல், பெசண்டம்மையை தலைவியாக்குவதிலும், அரசியல் பார்ப்பனர்களை காப்பாற்றுவதிலும் கவலை எடுத்துக்கொண்டிருக்கின்றதாகத் தெரிகின்றது. கமிஷன் பஹிஷ்காரத்தைப்பற்றி அவரவர்கள் அரசியல் அபிப்பிராயம் என்று சமாதானம் செய்து கொண்டு வாதாடலாமாயினும் பெசண்டம்மையாரை தலைவியாக்க ஆசைப்படுவதில் பார்ப்பனர்களுடன் போட்டி போடுவதான இரகசியம் நமக்கு விளங்கவில்லை. அது ஒரு புறம் இருக்கட்டும் என்று தள்ளிவிடுவதானாலும், பார்ப்பனரல்லாதாருக்கு கடுந்துரோகிகளாகிய அரசியல் பார்ப்பனர்களுடன் குலாவுவதும் அவர்களைகாப்பாற்றுவதும் பற்றி காரணம் அறியாமலிருக்க முடியவில்லை. சென்னை கார்ப்பரேஷன் தேர்தல் விஷயத்தில் அரசியல் பார்ப்பனர்கள் நடந்து கொண்ட விஷயத்தைப்பற்றி தமிழ் நாடு பத்திரிகை தனது அபிப்பிராயமாக ஒரு வரிகூட எழுத முடியாத நிர்பந்தம் இப்

## யார் பொய்யர்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர், ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியார் வீட்டில், ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாளின் தேவதாசிகளின் தீர்மானம் விஷயமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் போது, கிருஸ்துவ கன்னியாஸ்திரீகளைப் பற்றியும், மற்றும் பல விஷயங்களைப்பற்றியும், பேசிய பேச்சுக்களை இல்லை என்றுமறுத்து ஒரு அறிக்கை வெளியிட்டார். 'தமிழ் நாடு' பத்திரிகை அய்யர் சொன்னதாக குறிப்பிட்ட விஷயங்களை ருஜுப்படுத்துவதாக பந்தயங்கூறிற்று. அய்யர் அடங்கி விட்டார். ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாளும், அய்யர் கிருஸ்தவ கன்னியாஸ்திரீகளைப்பற்றி பேசியதும், மற்றும் 'தமிழ் நாடு' பத்திரிகையில் கண்ட விஷயங்களும் உண்மையென்று ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். அதற்கு ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் அவர்களும் மேலொப்பம் இட்டிருக்கிறார். இந்நிலையில், 'தமிழ் நாடு' நிருபர், ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாள், ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியார், ஆகிய இம் மூவர்கள் சொல்வது பொய்யா அல்லது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் சொல்வது பொய்யா என்பதை உணர பொது ஜனங்கள் ஆவலாயிருப்பார்கள். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் இதற்குமுன் எத்தனையோ தடவைகளில் பொய்யர் பட்டம் வாங்கி வாங்கி தேறியிருக்கின்றார். அல்லாமலும், 'தமிழ் நாடு' பந்தயம் கூறினபிறகும் ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாள் அய்யரின் யோக்கியதையை வெளிப்படுத்திய பிறகும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி "உலர்ந்த மாம்சம் திருட்டுக் கொடுத்த பார்ப்பனத்தி போல்" பேசாமல் இருப்பதால் அய்யர்தான் பேசி விட்டு இப்போது இல்லை என்று சொல்லுகின்றார் என்பதில் யாருக்கும் சந்தேகமிருக்க நியாயமில்லை. இம்மாதிரி அடிக்கடி பேசிவிட்டு பேசிவிட்டு இல்லை என்று சொல்லிக்கொண்டே வருவதை விட கண்ணியமாய் மன்னிப்பு கேட்டுக்கொண்டிருந்தால் அது மிகுதியும் நன்மையாயிருந்திருக்கும். இப்போது பேசிய குற்றம் ஒன்று, அதை மறுத்து இல்லையென்று பொய் சொல்லும் குற்றம் ஒன்று, ஆக இரண்டு குற்றத்தை சுமந்திருக்கிறார். இவர் தான் இந்திய அரசியல் கட்சியின் தலைவருள் பிரதானமானவராம். கவர்னருக்கும் சட்டமெம்பருக்கும் மந்திரிக்கும் அந்தரங்கவிசுவாசியாம்.

---

### மைடான் டில்லி ஐக்ய இந்திய சங்கம்.

இச்சங்கத்தாரால் தீபாவளியன்று மாபெருங் கூட்டமொன்று கூட்டப்பெற்றது. அவ்வமயம் ஸ்ரீமான் அரு. சொ. முருகப்ப செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார். பல அறிஞர்கள் 'தீபாவளிப் பண்டிகை' 'மாதர் முன்னேற்றம்' 'முயற்சி திருவினையாக்கும்' 'பிராமணீயத்தின் கொடுமை' 'வருணாசிரம அதர்மம்' 'சுயமரியாதை' ஆகிய தலைப்பின் கீழ் உரையாடினார்கள்.

சங்கத்திற்கு காப்பு நிதி ரூபா 1000 வரை சேகரிக்கப்பெற்றிருக்கிறது. இன்னும் ரூபாய் 1000 சேர்க்க சங்க அபிமானிகள் முயற்சிசெய்து வருகின்றனர்.

---

போது திடீரென்று அதற்கு ஏற்பட்ட காரணம் என்ன என்று கேட்கின்றோம்.

பார்ப்பன அரசியல் வாதிகள் தமிழ் நாடு பத்திரிகை ஆபீசுக்கு வந்து எவ்வளவு தூரம் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளுகின்றார்களோ அவ்வளவு தூரம் அவர்கள் மற்றும் எல்லாப்பத்திரிகை ஆபீசுகளுக்கும் தான் போய் கெஞ்சுகின்றார்கள், பார்ப்பனப்பத்திரிகைகளாகிய 'இந்து' 'சுதேசமித்திரன்' 'சுயராஜ்யா' முதலியவைகளும் பார்ப்பனரல்லாத பத்திரிகைகளாகிய 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' ஐரோப்பிய பத்திரிகைகளாகிய 'மெயில்' முதலியவைகளும் தைரியமாய் தமது அபிப்பிராயத்தை எழுதி இருக்கும்போது 'தமிழ் நாடு'க்கு மாத்திரம் ஏற்பட்ட தட்ட முடியாத தாக்ஷண்யம் என்ன என்று கேட்கின்றோம். பார்ப்பன தயவை எதிர்பார்க்கும் நிலை ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியாரைவிட 'தமிழ் நாடு'க்கு அதிகமாய் ஏற்பட்டு விட்டதா?

ஸ்ரீமான் வெங்கிடாசலம் செட்டியாரே எலக்ஷன் விஷயத்தில் தைரியமாய் பார்ப்பன சூழ்ச்சியை வெளிப்படுத்தி இருக்கும்போது 'தமிழ் நாடு' மாத்திரம் ஏன் பயப்படவேண்டும்.

பார்ப்பன சூழ்ச்சிக்கும் பார்ப்பன வகுப்பு வாதத்திற்கும் சென்னை தேர்தலைவிட சரித்திரத்தில் எழுதத்தகுந்ததான வேறு ஆதாரம் என்ன வேண்டும். திடீர் திடீர் என்று இம்மாதிரி துப்பாக்கியை கீழே போட்டு எதிரிகளுக்கு இடம் கொடுத்து விடுவதால் எவ்வளவு காரியம் கெட்டுப் போய் விடுகிறது. முதலாவது பார்ப்பனர்கள் கூட இப்பத்திரிகைக்கு பயப்படமாட்டார்கள், மதிக்கவும் மாட்டார்கள். ஏனெனில் நேரில் போய்சரிப்படுத்திக்கொள்ளலாம் என்கின்ற ஒரு தைரியம் அவர்களுக்கு உண்டாய் விடும். இரண்டாவதாக அடிக்கடி இம்மாதிரி அயர்ந்து விடுவதால் மக்களுக்கும் அதனிடத்தில் அதிக மதிப்பு இருக்காது என்கின்ற தைரியமும் அவர்களுக்கு ஏற்பட்டு விடும்.

இதைத் தமிழ் நாடு பத்திரிகை உணராதது எமக்கு ஆச்சரியத்தைக்கொடுக்கின்றது.


## மகாஜனங்களுக்கு ஒரு அறிவிப்பு.

இதனால் சகல கனதனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:— பழனி C. மலையப்பசாமி பிள்ளை "நித்தியானந்த மெடிக்கல் ஹால்" என்ற ஸ்தாபனமானது இதுவரை C. மலையப்பசாமி பிள்ளை அவர்கள் மானேஜ்மெண்டில் நடந்து வந்ததில் ஷை யார் 14—11—27 தேதி இறந்துபோய்விட்டாராகையால் இனிமேல் ஷை வைத்தியசாலையானது பழைய விலாசத்துடனே ஷை யார் சகோதரரும், அவருடன் கூட இருந்து சகல முறைகளையும் கற்று அவருக்கு உதவியாயிருந்து இதுவரை நடத்தி வந்தவரும், ஷை வைத்தியசாலையை நடத்திக் கொள்ள அனுமதி பெற்றவருமாகிய C. பொன்னுசாமி பிள்ளை அவர்கள் புரோப்ரைட்டராயிருந்து, ஷை யார் முறைப்படி சகல மருந்துகளும் தயாரித்து, நடத்துவார் என்பதை இதன் மூலமாய் தெரியப்படுத்தி இருக்கிறோம்.

C. பொன்னுசாமி பிள்ளை
நித்தியானந்த மெடிக்கல் ஹால்
பழனி. S. I.



இனாம்! இனாம்!! இனாம்!!!

## ஸ்ரீ கிருஷ்ணாநந்த கௌதம பரிமள சாலை.

1 வீரியவிர்த்தி லேகியம் 2 நறுமண அரக்கீரை விதைத் தைலம். 3 நறுமண சந்தநாதித் தைலம். 4 அருமையான கல் நார் பற்பொடி. 5 அத்தர் ஊதுபத்தி தினுசுகள்

இன்னும் அநேக விதமான லேகியங்கள், தைலங்கள், நறுமணவாசனைச் சாமான்கள் மிகக் குறைந்த விலைக்கு எங்களிடம் கிடைக்கும். ஒரு முறை வாங்கினால் உண்மை விளங்கும். விபரமான கேட்லாக் இனாம். ஏஜெண்டுகள் தேவை. தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

ஸ்ரீ கிருஷ்ணாநந்த கௌதம பரிமள சாலை
வலங்கமான், தஞ்சை ஜில்லா.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் தலைகள் தான் மொட்டையடிக்கப்படுகின்றன. நமக்குக் கிடைத்த இரண்டு சுயராஜியத்துக்குப் பிறகு ஹைகோர்ட் ஜட்ஜுகளும் உத்தியோகஸ்தர்களும் தான் அதிகப்பட்டன. இவ்விதம் சம்பளங்கள் அதிகப்பட்டும் நிர்வாகமும் ஒழுங்காக நடைபெறுவதாகக் காணோம். ஆகையால் சுயராஜ்யம், சுயராஜ்யம் என்று கத்துவதெல்லாம் வெள்ளைக்காரர்களும், பணக்காரர்களும், படித்தவர்களும் லாபம் பெறவேயொழிய நாட்டுக்கு எத்தகைய நன்மையும் ஏற்படப்போவதில்லை. ஆகையால் நாம் சுயமரியாதை யடைந்து ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டு உண்மையான சுயராஜ்யம் பெறவேண்டுமானால் மதத்தின் பேரால் ஏற்பட்டுள்ள மூடக் கொள்கைகளையும், புரட்டுகளையும் அறவே ஒழிக்கவேண்டியது அவசியமாகும் என்று தன்னுடைய பிரசங்கத்தை முடித்தார்.

பின்னர் சபைத்தலைவர் முடிவுரையாகப் பேசுகையில், திரு. நாயக்கர் சுமார் 2-30 மணி நேரத்துக்கு அதிகமாக பேசிய வார்த்தைகள் வீண்போகாதென்றும், கபடு, வஞ்சனை, சூது முதலிய பஞ்சமாபாதகங்களும் நிறைந்த ஒரு சாராரின் வேலையிலிருந்து பெரும் பாலோரான மற்றொரு சாராரை மீட்கவேண்டிய காலம் வந்துவிட்டபடியால் கடவுள் நமக்குக் கொடுத்த அறிவு, பகுத்தறிவு முதலியவைகளைக் கொண்டு சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றும், சுயமரியாதையைக் காப்பாற்றுவதை ஒவ்வொருவரும் தமது கடமையாகக் கொள்ளவேண்டுமென்றும், திரு. நாயக்கரின் கொள்கைகளை சாவகாசமாய் இருந்து ஆலோசனை செய்து உங்களுடைய அறிவுக்குச் சரியென்று தோன்றுகிறதானால் அதன்படி நடக்க முயற்சிக்க வேண்டுமென்றும் கூறி முடித்துப் பின்னர் ஸ்ரீமான் வேணுகோபால் நாயுடுவைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

### ஸ்ரீமான் வேணுகோபால் நாயுடு.

திரு. நாயக்கரின் அரிய பெரிய வேலையைப் புகழ்ந்து கூறுகையில் நாட்டில் ஒற்றுமை அவசியமென்றும், மத ஜாதிபேதமின்றி சகோதரத்வத்துடன் மக்கள் வாழவேண்டுமென்றும் ஒவ்வொரு ஜாதியாரும் தம்தமக்குகீழ் உள்ள ஜாதியாரை சமத்துவமாக பாவிக்க வேண்டுமென்றும் சுருக்கமாகக் கூறி முடித்தார்.

பின்னர் ஸ்ரீமான் நாடிமுத்து பிள்ளை பேசுகையில், திரு. நாயக்கர் அவர்களும் ஸ்ரீ. சின்னையா பிள்ளையவர்களும் நம் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்தைக் குறித்து விரிவாகக் கூறிவிட்டபடியால் அவர்கள் கூறிய விஷயங்களுள் முக்கியமும் முதன்மையுமான ஒற்றுமையைப் பற்றித் தான் சிறிது பேச உத்தேசித்திருப்பதாகவும், இத்தகைய ஒற்றுமை தஞ்சையில், தஞ்சை ஜில்லா மகாநாட்டில் தான் முதல் முதல் ஏற்பட்டதென்றும் கூறினார். பின்னர் நமக்குள் கட்சிபேதங்களும், இதர வித்தியாசங்களுமிருப்பதினாலேயே நம் சமூகம் நாளுக்குநாள் க்ஷீணதிசை யடைந்து வருகிறது. நம்முடைய பெரிய சமூகத்துக்குள் எவ்விதத்திலும் ஒற்றுமை ஏற்படும் விஷயமாக வேலைசெய்ய நான் இன்றைக்கும் நாளைக்கும் தயார் என்பதை இப்போது தெரிவித்துக் கொள்கிறேன். ஆதிதிராவிடர்கள் முன்னேறும் வகையிலும் நான் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறேன். நான் ஆதிதிராவிடர்கள் சமூகத்தில் நான்கு பெயர்களை தாலூகா போர்டுக்குத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று ஜில்லா போர்டுக்கும் மந்திரிக்கும் சிபார்சு செய்து அனுப்பியிருக்கிறேன். அப்படியிருக்க நான் தாழ்ந்த ஜாதியார்களுக்கு எதிராயிருக்கிறவனென்று பொது ஜனங்கள் நினைக்கும்படியாக விஷமப் பிரசங்கங்கள் பத்திரிகைகளில் எழுதி வந்திருப்பதைக் கண்டு நான் விசனிக்கிறேன். அன்றியும் அவ்வூரிலுள்ள ஜில்லா போர்டு மெம்பர் திரு. வேணுகோபால் நாயுடு என்னுடன் விரோத பான்மையுடன் நடந்து கொண்டு வருவதைக் குறித்தும் மிகவும் விசனிக்கிறேன் என்று கூறி முடித்தார்.

இந்த நிலைமையில் திரு. வேணுகோபால் நாயுடு எழுந்து ஸ்ரீ நாடிமுத்து பிள்ளை தன்னுடைய வார்த்தையை வாபீஸ் வாங்கிக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்.

பின்னர் திரு. நாயக்கர் எழுந்து பேசியதாவது:—இவ்விதம் ஒரு ஊரில் இருவர் ஒருவருக்கொருவர் விரோதபான்மையுடன் நடந்து கொள்ளுதல் சரியாகாது. ஸ்ரீ பிள்ளையும், நாயுடுகாரும் கௌரவமானவர்கள். ஸ்ரீ பிள்ளை மிகுந்த செல்வம் படைத்தவர், சிறு வயதுடையவர், அவர் தம் வாழ்க்கையில் இன்னும் எத்தனையோ நன்மை செய்யக் கடமைப்பட்டவர். நாயுடு நல்ல வக்கீல் படிப்பு படித்தவர். ஆகையால் இருவர்களுக்குள் ஏதாவது அபிப்பிராயபேதம் வந்துவிட்டால் ஒருவருக்கொருவர் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்ளவேண்டும். இவர்கள் இவ்விதமிருப்பின் அவர்களுடைய சச்சரவு தஞ்சை ஜில்லா முழுவதையுமே பாதிக்கக் கூடியது. சுமார் 10 வருஷங்களாகத்தான் நம் சமூகத்தில் பலர் தலையெடுக்கின்றனர். பல பெரிய வேலைகளையும் தங்கள் வசமாக்கியிருக்கின்றனர். இதற்கு முந்திய சரித்திரங்களைப் பார்த்தால் பிராமணர்களே எல்லா பதவிகளையும் ஏகபோகமாக அனுபவித்து வந்திருக்கின்றனர். சுமார் 10 அல்லது 15 வருஷங்களுக்கு முன் டாக்டர் நாயர், சர். பி. தியாகராய செட்டியார் போன்ற தலைவர்கள் நம் சமூகத்தில் தோன்றி பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்துக்கும் சுயமரியாதைக்கும் உழைத்ததின் பலனாகத்தான் ஸ்ரீ பிள்ளையும் நாயுடுவும் இத்தகைய பதவிகளை யடைந்திருக்கின்றனர். ஆகையால் நம் சமூகத்தின் முன்னேற்றத்துக்கு ஒற்றுமைதான் அடிப்படை. ஆகையால் எத்தகைய அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டாலும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க வேண்டுமெனக்கூறி இருவரையும் ராஜிப்படுத்தி வைத்தார். பிறகு இரவு 8-மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

---

கோவை சேர்மென்

# C. S. இரத்தினசபாபதி முதலியாரின் துணிபு.

## கலெக்டர் எ ஆர். காக்ஸ்துரையின் பெருந்தன்மை.

கோயமுத்தூர் டவுன் எக்சைஸ் லைசென்சின் போர்டுக்கு சென்ற வாரத்தில் தலைவரை தெரிந்தெடுப்பதற்காக கோவை கலெக்டர் ஆபீசில் மேற்படி போர்டு மெம்பர்களால் ஒரு மீட்டிங் கூட்டப்பட்டது. அம்மீட்டிங்குக்கு ஏழு மெம்பர்களே ஆஜரானார்கள். அவர்கள், ஸ்ரீமான்கள் கலெக்டர் காக்ஸ் துரை, சேர்மென் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார். எம் எல். சி., வைஸ்சேர்மென் அருணாசலம் செட்டியார், தேவசகாயம், சால்ட் சர்கிள் இன்ஸ்பெக்டர், போலீஸ் டிஸ்டிரிக்ட் சூப்ரண்டெண்ட், போலீஸ் சர்கிள் இன்ஸ்பெக்டர் . ஆகியவர்களே இந்த எழுவரில் ஸ்ரீமான கலெக்டர் காக்ஸ் துரை அவர்களை போலீஸ் சூப்பிரண்டு துரை அந்த போர்டுக்குத் தலைவராக பிரேரேபிக்க சால்ட் சர்கில் இன்ஸ்பெக்டர் ஆதரித்தார். உடனே ஸ்ரீமான் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் எழுந்து, உத்தியோகப்பற்றில்லாதவர் தலைவராக இருக்கவேண்டும் என்கின்ற கொள்கையின் பேரில் ஸ்ரீமான் தேவசகாயம் அவர்களை பிரேரேபிக்க ஸ்ரீமான் அருணாசலம் செட்டியார் ஆதரித்தார்.

ஓட்டுக்கு விட்டதில் ஸ்ரீமான்கள் காக்ஸ் துரையவர்களுக்கு மூன்று ஓட்டுகளும், தேவசகாயம் அவர்களுக்கு மூன்று ஓட்டுகளும் கிடைத்தன. இந்த சமயத்தில் ஸ்ரீமான் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் எழுந்து இம்மாதிரி போர்டுகளுக்கு உத்தியோகப் பற்றில்லாதவர்கள் தலைவர்களாயிருந்தால் ஜனங்களுக்கு போர்டிடம் நம்பிக்கையுண்டாகும் என்றும், போர்டு ஏற்படுத்தியதின் பலன் கொஞ்சமாவது ஏற்படக் கூடுமென்றும், இல்லாவிட்டால் போர்டு இருந்தும் சர்க்கார் அபிப்பிராயமே போர்டு அபிப்பிராயமாகிவிட நேருமென்றும், போர்டு ஏற்படுத்தியதின் கருத்து நிறைவேறாமல் போய்விடக்கூடும் என்றும் சொன்னார். உடனே கலெக்டர் துரை, ஸ்ரீமான் முதலியார் சொன்னதை அனுசரித்து, தான் அபேக்ஷகஸ்தானத்தில் இருந்து விலகிக் கொள்வதாய் சொல்லி விலகிக்கொண்டார். எனவே, ஸ்ரீமான் தேவசகாயம் அவர்கள் ஏகமனதாய் தெரிந்தெடுக்கப்பட்டார்.

இதில் மற்றொரு விசேஷம் என்னவென்றால், ஆஜராகியிருந்த ஏழு மெம்பர்களில் ஸ்ரீமான்கள் முதலியாரும் செட்டியாரும் தவிர கலெக்டர் துரையும் ஓட்டு கொடுத்ததால்தான் ஸ்ரீமான் தேவசகாயத்திற்கு மூன்று ஓட்டுகள் கிடைத்தன. ஸ்ரீமான் தேவசகாயம் [illegible]மை வகித்திருந்தார், கலெக்டர் துரைக்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களாகிய ஜில்லா சூப்ரெண்டு, போலீஸ் சர்க்கில் இன்ஸ்பெக்டர், சால்ட் சர்க்கிள்

இன்ஸ்பெக்டர் ஆகிய மூன்று பேரும் கலெக்டருக்கே ஓட்டு செய்தார்கள். ஆகவே கலெக்டர் அவர்கள் எதிர் அபேக்ஷகருக்கு இடுக் கொடுத்ததோடுதான் விலகிக்கொண்டதான இரண்டு வகையிலும் நடந்துகொண்டதானது மிக்க பெருந்தன்மை யென்றே சொல்லவேண்டும். அதோடு ஸ்ரீமான் இரத்தினசபாபதி முதலியார் அவர்களும் உத்தியோகஸ்தர்கள் மெஜாரிட்டியாயிருந்தும் கலெக்டரே அபேக்ஷகராய் இருக்கிறார் என்று தெரிந்தும் தைரியமாய் வேறு ஒரு அபேக்ஷகரை நிறுத்தியதுடன் கலெக்டரவர்களை பின் வாங்கிக்கொள்ளும்படி சொன்னதும் மிகவும் திரச்செய்கை என்றே சொல்லவேண்டும்.

எக்சைஸ் லைசென்ஸ் போர்டு கமிட்டிகளுக்கு உத்தியோகப்பற்றில்லாத தலைவர் முதல் முதல் தெரிந்தெடுக்க ஏற்பாடு செய்த பெருமை ஸ்ரீமான் முதலியாருக்கே உரியதாகும். சென்னை சட்ட சபைக்கு ஒரு பெண் உப பிரசிடெண்டாக இருக்க காரியம் ஆரம்பித்த பெருமையும் ஸ்ரீமான் முதலியாருக்கே உரியது. இன்னமும் இது போன்ற பல நன்மையையான விஷயங்கள் முதலியார் அவர்களால் செய்யப்பட்டிருக்கின்றது. ஸ்ரீமான் முதலியார் ஸ்தானத்தில் ஒரு பார்ப்பனர் இருந்திருந்தால் கலெக்டரையே பிரேரேபித்து தலைவராக்கி, கலெக்டரின் வெற்றியைப் பற்றி ஒரு கவியும் பாடி விட்டு, கலெக்டர் வீட்டுக்கும்போய் கூலியும் வாங்கிக்கொண்டிருப்பார். ஸ்ரீமான் முதலியார் தன்னைப்பற்றி விளம்பரம் செய்துகொள்ளும் குணமில்லாதவரானதினாலும், அவைகளில் அவர் மிகுதியும் அருவருப்புடையவரானதினாலும் அவர் செய்யும் அருமையான நற்காரியங்கள் மக்கள் அறியக் கூடுவதில்லை. ஆனால் முதலியாரின் எதிரிகளால் சில சமயங்களில் வெளியாகிவிடுகின்றன. எவ்வளவோ எதிர்ப்புக்கும் முதலியாருடைய எதிரிகளின் எவ்வளவோ சூழ்ச்சிக்கும் இடையில் கோயமுத்தூர் ஜல சப்ளை வேலை மும்முரமாக நடந்துவருவதின் பெருமை முதலியாரையே சேர்ந்ததாகும். அது போலவே கோபி தாலூக்காவில் பவானி ஆற்றுக்கு இரண்டு பெரிய பாலங்கள் கட்டுவதற்கு பிரயத்தனப்பட்ட காரியத்திலும் எவ்வளவோ தடைகளை நீக்கி வெற்றிபெற்று அப்பாலங்கள் சமீபத்தில்வேலை தொடங்கப்படும் நிலைக்கு வந்திருக்கும் பெருமையும் ஸ்ரீமான் முதலியாருக்கே சேர்ந்ததாகும். இவ்விரண்டு காரியங்களும் நிறைவேறியபின் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தனது பொதுநல சேவையை சற்று குறைத்துக்கொண்டு தன் சொந்தக்காரியத்தையும் சற்று கவனிப்பது அறிவுடைமையாகும். ஸ்ரீமான் முதலியார் ஸ்தானத்தில் வேறு பார்ப்பனர்கள் யாராவது இருந்திருந்தால் அவர்கள் சொந்தக்காரியங்கள் எவ்வளவோ முன்னுக்கு வந்திருக்கும் அவர்கள் சொந்தக்காரர்களையும் வெகுபேரை பணக்காரராக்கியிருப்பார்கள். ஆனால் இவ்வளவு நன்மை செய்யும் முதலியாருக்கு நன்றி செலுத்த ஆளில்லாவிட்டாலும்தரித்துக்கூறும் எதிரிகளுக்கு குறைவில்லை.

## கோலாலம்பூரில் ஓர் சோற்றுக்கடைப் பார்ப்பனரின் விஷமம்.

எனதன்புமிக்க பார்ப்பனரல்லாத சகோதர சகோதரிகளே! தயவு செய்து நான் கீழே குறிக்கும் விபரமுணர்ந்து, சுயமரியாதையுடன் வாழ முற்படுவீர்களாக.

நான் இவ்வூரில் 5 நம்பர் பிரிக்பீல்ட்ஸ் ரோடு 'மஹான் ரெஸ்டாரெண்ட்' என்னும் ஓர் பார்ப்பனரின் சாப்பாட்டுக் (15- கட்டை ஐயர்) கடையில் சென்ற இரண்டு வருடமாகச் சாப்பாடும், இருப்பிடமும் வைத்துக்கொண்டிருக்கிறேன். இக்கடையில் பார்ப்பனர்கள் சாப்பிட்ட எச்சில் இலைகளை மட்டும் எடுப்பதற்கு ஆள் வைத்தும், நம்மவர்கள் சாப்பிடுகிற இலைகளை அவரவர்களே தான் எடுக்கவேண்டுமென்றதுமான வழக்கம் இதுவரை எப்படியோ ஏற்பட்டிருந்தது. இப்பொழுதோ, பல பார்ப்பனர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தனியிடமொன்றிருக்க, அவ்விடத்திலேயன்றி நம்முடனும் வழக்கமாகக் கலந்து உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். அப்படிக் கலந்து உட்கார்ந்து சாப்பிடும் பொழுதும், அப்பார்ப்பனர்களுடைய இலைகளைமட்டும் (பார்ப்பனரல்லாத) வேலைக்காரர்களைக் கொண்டு எடுத்துப்போடச்செய்கிறார்கள். நம்மவர்களும் இலைகளை எடுக்காமல் எழுந்து போகும் பட்சத்தில் கலகஞ்செய்தாவது எடுத்துப் போடும்படி கட்டாயப் படுத்துகிறார்கள். ஒரே பந்தியில் சாப்பிட்ட இவர்களுள், ஒருவர் இலை எடுக்காமல் போகச் சுதந்திரம் பெறவும், மற்றவர் இலை எடுத்துப் போகும்படி கட்டாயப் படுத்தப் படுவதுமென்றால் இவ்வக்கிரமத்தைச் சுயமரியாதையுள்ள எவராவது சகிக்கமுடியுமா? என் சகோதரர்களே சிந்தித்துப்பாருங்கள்.

இக்கடையில் சாப்பிடுகிறவர்கள் யாவரும் அநேகமாய், பார்ப்பனரல்லாத நம்மவர்களே. நம்முடைய காசுகளே இச்சோற்றுக்கடைப் பார்ப்பனருடைய பெட்டியை நிரப்புகிறது. இப்பார்ப்பனர், நாம் கொடுக்கும் பணத்திலேயே வாழ்வை நடத்திக்கொண்டு, நம்மவர்களையே அவமரியாதை செய்வதென்றால், இதைச் சுயமரியாதையுள்ள எவரேனும் சகித்துக்கொண்டிருக்க முடியுமாவென்பதை யோசித்துப்பாருங்கள். உங்களுடைய திரேகத்தில் பார்ப்பனரல்லாதார் இரத்தம் சிறிதேனும் ஓடிக்கொண்டிருக்கும் பட்சத்தில், இவ்வக்கிரமச் செயலை அடக்காது மௌனம் சாதிப்பீர்களா? சகோதரர்களே! இப்பொழுதே பார்ப்பனரல்லாத நம்மவர்களின் சுயமரியாதையைக் காப்பாற்றவும், இப்பார்ப்பனருடைய அக்கிரமத்தை அடக்கவும் முந்துவீர்களாக. அவ்வாறே நீங்கள் செய்வீர்களென்ற நம்பிக்கை கொண்டே, உங்கள் பூரண ஒத்தாசைகிடைக்குமென்றே நான், இலைகள் எடுத்துப்போட ஆள் வைப்பதென்றால் பார்ப்பனர், அல்லாதார்,என்ற வித்தியாசமின்றி யாவர்க்கும் எடுத்துப்போட ஆள் வைக்கவேண்டும் என்ற கொள்கையின் பேரில், சென்ற அக்டோபர் மாதம் 28-ந் தேதி முதல் சாத்வீக எதிர்ப்பைக்கைக்கொண்டு நடத்திவருகின்றேன். அதன் மூலமாக இக்கடைப் பார்ப்பனர், நான இலை எடுத்துப் போடாத பட்சத்தில் சாப்பாடு கொடுக்க முடியாதென்று நிறுத்திக்கொண்டு கடையை விட்டுப் போகும்படிக்கும் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். என்னே! இப்பார்ப்பனரின் பிரித்தாளுங்கொள்கை. நான் கடையை விட்டுவிட்டால் மற்றவர்களுக்குக் கண்ணில்லையா? இப்பார்ப்பனரின் அக்கிரமம் வெளிப்படாதா? சகோதரர்களே! ஒற்றுமை யுணர்வு கொண்டு நமது சுயமரியாதையைக் காப்பாற்ற முந்துங்கள். என்னுடன் சேர்ந்து இலையை எடுத்துப்போட மறுத்த மற்ற நமது சகோதரர்களுக்கும் எனக்குச்செய்த மாதிரியே இப்பார்ப்பனர் செய்திருக்கிறார்.

சகோதரர்களே! எவ்வளவு காலந்தான் சுயமரியாதையை இழந்து, இப்பார்ப்பனருடைய சூழ்ச்சியில் சிக்கி கண்மூடித் தூங்குவது? கண்விழியுங்கள்! இன்றே இப்பார்ப்பனருடைய அக்கிரமச் செயலை ஒடுக்க, உங்கள் நண்பர்களும் நீங்களும் இம்மாதிரி கடையில் சாப்பிடக் கூடாது? சாப்பிட்டால் இலைகளை எடுத்துப் போடாமற் போகவும், மற்றவர்களையும் அவ்விதமே செய்யவும் வேண்டுங்கள். சுயமரியாதையுள்ளவாலிபர்கள்பலர் இவ்வக்கிரமத்தை யொழிக்க இன்றே முந்தும்படியும் வேண்டுகிறேன். சுயமரியாதை வாழ்க.

எம். ஆர். சுப்பையா.

குறிப்பு.—தமிழர்களின் முன்னேற்றத்தைக் கருதியும், முக்கியமாகத் தொழிலாளர்களின் நன்மையைக் கருதியும், 5 லட்சம் தமிழர்களுள்ள இம்மலாய் நாட்டில் நடைபெறும்ஒரேவாராந்திரத்தமிழ் பத்திரிகை என்று தற்பெருமை செய்துகொண்டு உலவிவரும் 'தமிழ் நேசன்'' என்னும் பார்ப்பனப் பத்திரிகை நான்கு நாட்கள் வரை மேல்கண்ட விஷயத்தைப் பிரசுரிப்பதாக வைத்திருந்து விட்டு எக்காரணத்தாலோ பிரசுரிக்க முடியாதெனத் திருப்பி விட்டது. சுயமதிப்பும் சுதந்திர உணர்ச்சியு முள்ளவர்கள் இப்பார்ப்பனப் பத்திரிகையின் பாரபட்சத்தையும் உணர்வார்களாக.

எம். ஆர். எஸ்.

குறிப்பு:—இந்தியாவில் சோற்றுக்கடை வைத்திருக்கும் பார்ப்பனர்கள் பிராமணர் பிராமணரல்லாதார் என்ற பாகுபாடு இல்லாமல் யாவருடைய எச்சில் இலைகளையும் அப்புறப்படுத்த ஏற்பாடு செய்திருக்கும் பொழுது, கப்பலேறி வயிறு வளர்க்கப் பரதேசம் போன பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாதாருடைய இலைகளை மாத்திரம் சுயமரியாதைக்கு விரோதமாய் அவர்களையே எடுக்கும்படி கட்டாயப்படுத்துவதின் திமிர் என்ன என்பது நமக்கு விளங்கவில்லை. பார்ப்பனக்கொடுமை இங்கு மாத்திரமின்றி அவர்கள் செல்லும் பக்கமெல்லாம் இருப்பதால் அக்கொடுமையை எங்கு கண்டாலும் ஒழிக்க முற்படவேண்டியது மனிதனின் தெய்வீகச்செயல் என்றே சொல்லுவோம். ஆதலால் சுயமரியாதையுள்ள தமிழ் மக்கள் இம்மாதிரியான கடைகளுககுள் நுழையக் கூடாது என்பதே நமதபிப்பிராயம்.

(ப—ர்.)

---

## சுவாமி சிதம்பரனார் அவர்களுக்கு நன்றியறிவிப்பு.

"குடி அரசு"க்கு அழகிய விஷயதானம் செய்துவரும் சாமி சிதம்பரனார் அவர்கள் இனி தமிழ் வேதமென்னும் திருக்குறளின் 313 அதிகாரங்களையும் ஆராய்ச்சி செய்து ஒவ்வொரு அதிகாரத்தின் ஆராய்ச்சியையும் ஒவ்வொருவாரக் "குடி அரசு"ப்பத்திரிகையில் பிரசுரம் செய்ய இசைந்திருப்பதை பெருமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு நமது நன்றியறிவிப்பை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

(ப.-ர்.)

## பேராவூரணி
## சுயமரியாதை மகாநாடு.
## வைக்கம்வீரர் விஜயம்.

உயர் திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களும் மயூரமணி ஆர். சின்னையாபிள்ளையவர்களும், திராவிடன் ஆசிரியர் ஜே. எஸ். கண்ணப்பரவர்களும் கோகலே ஹால் வீரர் என். தண்டபாணி பிள்ளையவர்களும் விஜயம்செய்வார்கள்.

இப்பட்டுக்கோட்டை தாலுக்காவில் சுயமரியாதைச் சங்கங்கள் பல பாகங்களிலும் நாளுக்குநாள் பரவி வருவது போற்றத்தக்கது. தஞ்சை ஜில்லாவிலே பார்ப்பனீயம் என்கிற பேய் நிறைந்து தாண்டவமாடும் இக்காலத்தில் நமது வைக்கம் வீரரின் சுயமரியாதை உணர்ச்சியின் உபதேச மொழிகள் பார்ப்பனீய சூழ்ச்சிப்பேயை விரட்டி வருவது பாராட்டத்தக்கது. இவைகளின் சார்பாக சமீபத்தில் சில நமது சுயமரியாதை நண்பர்களின் முயற்சியில் பேராவூரணியில் சுயமரியாதைப்பிரசங்கம் நிகழ்த்தி ஒரு சங்கமும் நிருவப்பட்டிருக்கிறது. அச்சங்கத்திற்கு, அவ்வுணர்ச்சியை நாட்டு மக்களிடை யெழுப்பிய நமது மாபெருந்தியாகி திரு. ஈ. வெ. நாயக்கர் அவர்களை வரவழைக்கவேண்டு மென்கின்ற பெரு முயற்சியால் சுயமரியாதை மகாநாடு ஒன்று வெகு ஆடம்பரமாக 22—11—27ல் 50, 60 கிராமத்தார்களால் முயற்சியுடன் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோது மேற்கண்ட தேச தியாகப்பெரியோர்களும் அநேக தஞ்சை ஜில்லா தலைவர்களும் வருவார்கள். இந்த சுயமரியாதைச் சங்கமானது ஓர் புதிய உணர்ச்சியை யெழுப்பி செய்கையில் நடத்த முன்வந்து நிற்கும். அது போது நமது தலைவர்களும், பெரியார்களும், அன்பர்களும் தவறாது விஜயம் செய்யக்கோருகின்றோம். ஒருநிருபர்.

---

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் கூறியபடி நடத்தினால் வீடு கிடைக்குமென்றதுணிபு பற்றியேயாகும்.

நமது திருக்குறளில் இல்லறம் துறவறம் என்பனபற்றியும், அரசியலைப்பற்றியும், மணஞ்செய்துகொண்டு இல்லத்திலிருந்து இன்பம் அடைவது பற்றியும் கூறப்படுவதை தமிழர் அனைவரும் அறிந்து கொள்ளவேண்டுமென்ற பேரவாவுடன் திருக்குறளிலுள்ள நூற்றுமுப்பத்திமூன்று அதிகாரங்களையும் பிரதி வாரமும் "குடி அரசில்" வெளியிட யெண்ணியுள்ளேன். இக்கட்டுரைகளைக்கொண்டு தமிழரின் நாகரீகத்தைத் தமிழர்களுக்கு விளக்கக்கூடுமென்ற துணிவுடையேன். திருவள்ளுவரின் உண்மைக்கருத்தை வெளியிடவே பரிமேலழகரின் உதவியினால் எனது சிற்றறிவைக்கொண்டு எழுதமுற்படுவதில் பார்ப்பனீயத்தைப் பகுத்தறியாத தமிழறிஞர்கள் எனது கட்டுரைகளின் கருத்தில் வேறுபடக்கூடும். அது பற்றியான் சிறிதும் பின் வாங்கவில்லை. உண்மையை வெளியிடுவதற்கு என் பின்னடைதல் வேண்டும். எனது முயற்சிஇனிது நிறைவேறுமாறு இறைவனையும் எனது ஊக்கத்தையும் வேண்டிக்கொள்ளுகிறேன். தமிழர்கள் விரும்புவார்களாயின் பின்னர் இக்கட்டுரைகளைப் புத்தகமாக வெளியிட எண்ணியுள்ளேன்.

---

# திருவள்ளுவர் வாழ்த்து.

தமிழ் வேதமென்னும் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர்மீது அம்பாசமுத்திரம் பார்ப்பனரல்லாத வாலிப கழகத்தார் பாடியது.

நாளது 12—11—27ல் கூடிய கழகக்கூட்டத்தில் உயர் திருவாளர் ராவ்சாகிப் காந்திமதிநாதம் பிள்ளையவர்கள் தலைமையில் படிக்கப்பட்டது.

எழுசீரடி யாசிரிய விருத்தம்.

ஆரி யத்தனின் மிக்க மேன்மை யழிபு மென்னவஞ் சேங்கவே
சீரி யல்'தமிழ்'த் தேமொ ழிக்கொரு தெய்வமா'மறை' யீந்தனன்
பேரி சைக் குறு மாமு னிக்குல வழியின் 'வள்ளுவன்' பெருமையை
ஓரி லுடகத் தியாரு முன்னினர் வண்மை யோமென வாழ்த்துமால். (1)

எம்ம தத்தின ராயி னுந்தமக் கற்ற முற்றதோர் பொருளெனச்
சம்ம தத்தினி தேத்தி வாழ்த்திடத் தக்க விப்'பொது மறை'யினால்
கொம்மை முத்தமிழ்க் கொற்ற நாட்டினர் மயிலை யூரினிற் குவலயம்
மம்மர் நீத்துணர் வாற்ற வந்தருள் 'நாயனு' ரென வாழ்த்துமால். (2)

இயையு நாற்பொரு ளினித ளிக்குமோர் நூல தேயரு நூலென
உயரு நான்மொழித் தொன்றி ரண்டையு முற்ற ளிக்கு 'முப்பா' லினை
முயல யாவரு முத்தி யெய்துதல் முன்னி ஈந்தருள் முனைவனை
இயலின் மிக்கதோர் 'தேவ தேவ' னென் றென்று மேத்தினர் வாழ்த்துமால், (3)

நைந்த ழிந்திடு முயிரி னுக்கரு நன்ம ருந்தெனும் வாய்மையால்
உழ்ய்து யர்ந்திட உலகம் வாழ்ந்திடற் குற்ற 'வாயுறை வாழ்த்தினை'
ஐந்தி லக்கணத் தீற்ற யற்கொரு முதலெ னப்படு பாவினால்
மைந்து றழ்ப்புது நூல ருள் 'முதற் பாவ லன்! புகழ் வாழ்த்துமால். (4)

நிறையி ரண்டடி கொண்டு மூன்றுல கன்ற ளந்திடு நெடியனை
குறையி னின்றிடு மடியி னால்வெலுங் "குற"ளெ னும்உல வாக்கிழி
பிறைநு தற்றிரு மானை னுங்கலை மடந்தை வாழருட் பீடமாம்
நறைப துஞ்"செந் நாமலர்"ப்பெருந் தகையின் தாளினை வாழ்த்துமால். (5)

உண்மை யன்பறி வான வோரிறை வாய்ம லர்த்திருக் கிளவியின்
பின்வி ளங்குயர் வேத மாகையின் பேர்கொள் "உத்தர வேத" மென்
றின்ப மார்தரு கலையை வீறுகொண் டெழுந்த மிழ்க்கடை மாணவ
துன்ப மாழ்ந்தொடுத் திடத்தி டும் "பெரு நாவலன்" பெயர் வாழ்துமால். (6)

அருத்து மாந்தர்தங் கருத்தெ னும்பல பார்ப்பி னுக்கமு தூட்டியே
திருத்து புள்ளெனக் கருத்தன் பேர்கொளுஞ் செய்ய வான் "திரு வள்ளுவர்"
அருத்த நூலினை யருளப் பார்பிசை அலரி ருக்கையு மன்புள
முருத்து வாணகை நீத்து முன்வரு "நான்மு கன்" அருள் வாழ்த்துமால். (7)

பொய்ம்மை நீக்கிய பொருளனைத்தையும் பொருளெ னத்திரட் டிப்பெரும்
மெய்ம்மை யோருரு வாகச் செய்தருள் மேன்மை மிக்க 'பொய் யாமொழி'
செம்மை யாருயிர்க் கன்னை சீலமும் செருக்கெ னுந்திமி ரந்தனை
மும்மை யோட்டு மா தாது பங்கி'யென முதுமை யோனியல் வாழ்த்துமால். (8)

பூவெ னத்தரும் பொங்கு தாமரை யென்று சான்றவர் புகறல்போற்
பாவெ னத்தரும் குறளெ னுந்திருப் பாவி னுவியல் 'தெய்வநூல்'
தேவ ரியாவரும் செயலி ழந்துசென் றெய்த்து நிற்பவத் தேவர்தாம்
ஆவல் கொள்விடை யருளுந் 'தெய்வதப் புலவன்' வாக்கினை வாழ்த்துமால். (9)

வேட்ட வேட்டவர் வேண வாகுடித் தென்று மன்றென விளக்கலரல்
மேட்டி மிக்கஜர் தருவெ னுந்'திரு வள்ளுவப்பயன்' விண்டவன்
வாட்ட டங்கண் மனைவி யாலுல கத்தினுக் குயர் கற்பினைக்
காட்டு 'மந்தணன்' கடிம லர்ப்பதம் கடமை யே யென வாழ்த்துமால். (10)

பன்னஞ் சூழ்திருப் பூவை மாநகர் 'இராஜ கோட்டியப் பன்'திரு
'வள்ளுவர்' புகழ்அ றிந்து வாழ்த்தமிழ் 'வான்பொருள்' பதிகந்தனை
உன்னி வாழ்த்தியர் கற்ற மோடவற் புவனி போற்றுமக் காளெலாந்
தன்ன ருந்தமி ழன்பு தாங்கினர் வாழி! வாழியர்!! வாழியே!!! (11)

## சுயமரியாதைத் திருமணம்

### பார்ப்பனச் சூழ்ச்சி பலிக்கவில்லை.

6–11–27 ஞாயிறு காலை 8½ மணிக்கு மேல் மாயவரம் தாலூகா பெரம்பூரில் ஹெட் கான்ஸ்டேபில் திருவாளர் மாணிக்கம் பிள்ளைக்கும் நல்லாடை திருவாளர் காத்தமுத்து பிள்ளை குமாரி திருவளர்செல்வி முத்தாமலை ஆச்சி அம்மாளுக்கும் (பார்ப்பனரல்லாத) விசலூர் திருவாளர் க சாமிநாத தேசிகரால் செவ்வனே திருமணம் நடத்திவைக்கப் பட்டது. உள்ளூர் பார்ப்பனப் புரோகிதர், பார்ப்பனரல்லாதாரைக்கொண்டு திருமணம் நடைபெறுதிருக்க பெண்ணின் தந்தையிடம் எவ்வளவோ சூழ்ச்சி செய்தும் பார்ப்பன சூழ்ச்சியை வீழ்த்தி சுயமரியாதையை நிலைநாட்டிய மண மகனும் மண மகளும் நீடு வாழ ஆண்டவன் அருள் செய்வானாக.

ஒருநிருபர்

---

3-ம் பக்கத் தொடர்ச்சி

வதாயிருந்தால் தென்னாப்பிரிக்காவிலும் ஜினீவாவிலும் நாலாயிரம் ஐயாயிரம் சம்பளம் வாங்கி சுகப்படுவது எப்படி? அரசமரம், ஆலமரம், ஆற்றுப்படித்துறை, சத்திரம், கோவில் மண்டபம், உபாதானம் போடும் வீடு, காசி இராமேஸ்வரம் போகும் வழியிலுள்ள பிச்சை போடுமிடம், மூதலியவைகளேபாப்பானின் பூர்வீக இடம். இந்த இடத்தை விட்டு விட்டு எப்படி வக்கீலானார்கள்? இவர்கட்கு வழக்கமில்லாத உண்டு உடுத்தும் வைபவங்களோடு எப்படி மேனாடு போனார்கள்? போனவிடத்தில் இவர்களுக்கோ அவர்களுக்கோ வந்த துன்பமென்ன? அங்கிருப்பவர்களெல்லாம் யோக்கியதையுடையவர்களாகஇருப்பதற்கும்நம் தேசத்தில் படித்தவர்கள்படிக்காதவர்கள்ஒன்று சேர்ந்தால் பம் வந்து துன்பம்விடுமென்று சொல்லுவதற்கும் காரண மென்ன? இவர்கள் மட்டும் இருப்பிடத்தை விட்டு எல்லா போக போக்கியங்களையும் அனுபவிக்கலாம்! மற்றவர்கள் இருந்த இருப்பிடத்திலேயே இருப்பது தான் ஞாயமாம். அங்கிபெசன்டு அம்மாள் இருக்குமிடத்திலேயேஇருந்திருந்தால் ஆணும் பெண்ணும் சகோதரர்கள் போல மாட மாளிகை கூட கோபுர நந்தவன சிங்காரதோட்டத்து பளிங்கு மண்டபத்தில் பிரமஞான சங்கத்தின் மகிமையில் சந்தோஷப்படுவது எப்படி? நமது இந்து சாஸ்திரங்களிலுள்ள படடங்களில் சாஸ்திரிஆசாரிஎன்பவை தான் விசேடமானவை. சாஸ்திரிக்கு இருப்பிடம் சாஸ்திர மூட்டை.ஆசாரிக்கு இருப்பிடம் தீர்த்தப் பிரசாதம் பெரும் சிஷியக் கூட்டம்.இந்த இடத்தை விட்டு விட்டு தென்னாபிரிக்காவெல்லாம் பரவ இடம் கொடுத்த இந்து சாஸ்திரம் படிக்காத சமூகத்திற்கு வீதியில் வருவதற்கு கூட இந்து சாஸ்திரம் இடம் கொடுக்கவில்லை என்றால் அந்த இந்து சாஸ்திரத்தை விட அக்கிரமமான ஒரு சாஸ்திரம் இருக்குமா? அப்பேர்ப்பட்ட அக்கிரமமான சாஸ்திரம் ஒழிய வேண்டுமென்பதே 'குடி அரசின்'கருத்து. முதல் முதல் வெள்ளைக்காரர்களே பீச்ரோட்டில் சமூத்திரக்காற்று வாங்க வருவார்கள். இப்பொழுது நாமும வரிசையாய் காற்றுவாங்க பீச்ரோட்டில் நிற்கிறோம். உங்கள் இருப்பிடத்தை விட்டு இங்கு என் வந்தீர்கள் என்று வெள்ளைக்காரன் நம்மை கேட்பதாயிருந்தால் நம் மனமெப்படி இருக்கும்? அப்படி ஒரு சட்டமிருந்தாலும் அதை நாம் எப்படி பகைத்து அது ஒழியவேண்டுமென் போம். அது போல இன்னொரு பெரும் சமூகத்தின் விருத்திக்கு தடையாக இருக்கும் இந்து மதம் கடவுள் வாயிலிருந்து வந்ததாயிருந்தாலும் அது ஞாயமாய் நிர்மூலமாய் பாழடைய வேண்டியதே என்கிறார் 'குடி அரசின்' ஆசிரியர்.

## பார்ப்பனீய மொழிந்த சுபாசுப சடங்குகள்.

சென்னை தண்டையார் பேட்டை, ஆசிர்வாத நாடார் தோட்டத்தில் வசிக்கும் அ. இஷ்டஞ்செட்டியார் தமது குமாரத்தி சௌ. அழகருக்ஷியம்மாளுக்கு 13—11—27 ல் பிராமணப் புரோகிதம் நீக்கி ருது சாந்தி சடங்கு நடத்தினார்.

ஷை தண்டையார் பேட்டை சிங்காரத் தோட்டம்5-வது சந்து திருவாளர் சோ அ. அழகிரிசெட்டியார் தமது குமாரத்தி சௌ. கரியம்மாளுக்கு 14—11—27 ல் பிராமண புரோகிதம் நீக்கி ருது சாந்தி சடங்கு நடத்தினார்.

ஷை சிங்காரத் தோட்டம் 1 வது சந்து திருவாளர் சு, வீ, கருப்பஞ்செட்டியார் தமது குமாரன் காலஞ்சென்ற சுப்பிரமணியசெட்டியாருக்கு 11—11—27 ல் பிராமணபுரோகிதம் நீக்கி புண்ணியாவாஹம் நடத்தினார்.

ஷை சிங்காரத் தோட்டம் 7 வது சந்து திருவாளர் கு எ, சுப்பராஞ் செட்டியார் தனது குமாரத்தி காலஞ்சென்ற வீராகவது அம்மாளுக்கு 14—11—27 ல் பிராமணப்புரோகிதம்நீக்கிபுண்ணியாவாஹம் நடத்தினார். ஷை சடங்குகளெல்லாம் சங்கத்தினரால்நடத்தப்பட்டன. பிராமணப்பூண்டு வேரோடு அழிந்தது.

காரியதரிசி,
ஸ்ரீ ப்ருதிவீச்சுர மகாஜன சங்கம்.

---

## பார்ப்பனீயம் ஒழிந்த சிரார்த்தம்.

மன்னார்குடி தாலூக்கா கழுகத்தூரில் ஸ்ரீமான் ரங்கசாமித்தேவர் குமாரர் பக்கிரிசாமித்தேவர் அவர்கள் நாளது மாதம் 3—11—27 வியாழக்கிழமை தினம் தம்முடைய தாயார் சிரார்த்தத்தை பிராமண புரோகிதம் இல்லாமல் ஷையார் சொந்த உறவினர்களைக் கொண்டு நடத்தி சில சாதுகளுக்கும்உறவினர்களுக்கும்சாப்பாடும் அளித்தார்.

---

## திருவண்ணாமலை

### பார்ப்பனீய மொழிந்த திதி.

1—11—27 செவ்வாய்க்கிழமை திருவாளர் முனிசிபல் கவுன்சிலர் ஆறுமுக முதலியார் காலஞ்சென்ற தம் முதல் மனைவியின் ஞாபகார்த்தமாக புரோகிதத்தையே நீக்கி, ஏழைகளுக்கு அன்னமிட்டார் இச்சுயமரியாதை வீரரை யாவரும் பின்பற்றுக! என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

### பார்ப்பனரல்லாத வாலிபர் சங்கம்.

இச்சங்கத்தின்சார்பாக19—11—27 லும் 27—11—27 லும் 'பொன் விலங்குகள' 'லீலாவதி சுலோசனா' என்னும் இரு நாடகங்கள் அங்கத்தினர்களால் நடிக்கப்பெறும். நாடக வசூல் இச்சங்கத்தின் நடைமுறைக்கும் சுயமரியாதை முன்னேற்றத்திற்கும் செலவிடப்பெறும்.

---

## ஈரோடு முனிசிபல் சுதந்திர சம்ரக்ஷண சங்கத்தின் நன்றி அறிவிப்பு.

ஈரோடு நகரபரிபாலன சபையைச் சேர்ந்த அக்ரஹாரம் வார்டு வாக்காளர் அனைவருக்கும், மற்றும் முனிசிபல் சுதந்திரங்களைக் காப்பாற்றும் விஷயத்தில் ஊக்கமுள்ள எல்லா கனவான்களுக்கும் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், நேற்று ஈரோடு அக்கிராஹாரம் வார்டுக்காக இரண்டு கவுன்சிலர்களை தெரிந்தெடுத்ததில் ஷை சங்கத்தாரால் பிரரேபிக்கப்பட்ட ஸ்ரீமான்கள் M. S. A. முத்துக்கருப்பஞ்செட்டியார், K. காதர்சாபபு பகதூர் ஆகிய இரண்டு கனவான்களும், தாங்கள் எல்லோரும் ஊக்கம் எடுத்துக்கொண்டு வாக்காளர்கள் வாக்குகளைக் கொடுத்தும், வாக்காளர்களுக்கு அவர்களின் பொறுப்பை விளக்கியும், சங்கத்தார் முயற்சியை பயன் படும்படி செய்ததற்காகவும, ஷை சங்கத்தார் சார்பாக நன்றி பாராட்டுவதுடன் மென்மேலும் இவ்வூக்கம் சரியான முறையில் அபிவிர்த்தியாக வேண்டுமென்று எல்லாம் வல்ல ஈசனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஈரோடு.
16—11—27

M. சிக்கய்ய நாயக்கர்,
காரியதரிசி.

---

## திராவிடன் ஆசிரியர் மீது மானநஷ்ட வழக்கு.

திருநெல்வேலி டிப்டி மாஜிஸ்டிரேட் முன் வேலூர் குப்புசாமி முதலியாரால் 'திராவிடன்' ஆசிரியர் மேல் தொடுக்கப்பட்டிருந்த மானநஷ்ட வழக்கு 10—11—27ல் தள்ளுபடி செய்தாகி விட்டது.

---

## சேலம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி தேர்தல்.

சேலம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு 1927—28க்கு உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு 14—11—27 தேதி மாலை 5-மணிக்கு ஸ்ரீமான் ஜி. ராமச்சந்திர நாயுடு பங்களாவில் ஜில்லா போர்டு உபதலைவர் ஸ்ரீமான் எஸ். பி. ராஜமாணிக்க பண்டாரம் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் அங்கத்தினர்களின் கூட்டம் கூடியது.

ஸ்ரீமான் ஜி. ராமச்சந்திர நாயுடு அக்கிராசனராகவும், ஸ்ரீமான் எஸ். பி. ராஜமாணிக்க பண்டாரம் உப அக்கிராசனராகவும், ஸ்ரீமான்கள் நடேச பண்டாரம், பி. கந்தசாமி பண்டாரம் காரியதரிசிகளாகவும், டாக்டர் பி. கே. கிருஷ்ணன் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுககப்பட்டனர். காரியதரிசி,

ஜி. கா. கமிட்டி.

---

"சுயமரியாதை".
இஃதோரு வாரப்பத்திரிகை
வருடசந்தா ரூபாய் மூன்று தான்.
மானேஜர்,
'சுயமரியாதை' ஆபீஸ்,
2281, ஐயங்கடை,
தஞ்சாவூர்.

## ஓர் எச்சரிக்கை.

திருப்பூர் கம்போடியா காட்டன் பிளாண்டிங் அண்டு கதர் மேன்யுபாக்டரிங் கம்பெனி லிமிடெட் என்று பெயர் வைத்துக் கொண்டு சிலர் மகாத்மா காந்தியடிகளின் பெயராலும் கத்தரின் பெயராலும் பங்குத் தொகைகளுக்கு அநேக பத்திரிகைகளில் விளம்பரம் செய்து வருகின்றனர். இதைப் பற்றி விசாரித்த அளவில் இந்த கம்பெனியார் இது வரையில் எவ்வித கதர் வேலையும் செய்ததில்லை யென்றும், இந்த கம்பெனியை ஆரம்பித்தவர்கள் கதர்த்தொண்டின் அனுபவமே இல்லாதவர்களென்றும் தெரிகிறது. கடன் தொந்திரவினால் தங்களுடைய நிலங்கள் பந்தகத்தில் அகப்பட்டு மீட்க வகையில்லாமலிருக்கும் சிலருடைய சொந்த நன்மையை உத்தேசித்து இந்த கம்பெனி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த கம்பெனி மூலம் கதர் வேலை நடைபெறுமென்று நம்ப இடமில்லை. ஏதோ பந்தகத்திற்கு உட்பட்டிருக்கும் நிலங்களில் பருத்தி சாகுபடி செய்து அந்தப் பருத்தியை நூற்று நெய்யப்போவதாகச் சொல்லப்படுகிறது. அது அனுபோகத்தில் நடக்கிற காரியமல்ல. இந்த கம்பெனியார் அகில பாரத சர்க்கா சங்கத்திலிருந்து சாதாரண கதர் உற்பத்திக்காரர்களுக்கு அளிக்கப்படும் அத்தாக்ஷி பத்திரம் கூடப்பெறவில்லை. இந்த கம்பெனியின் மாதிரியும் நோக்கமும் சந்தேகத்திற் கிடந்தருகிறபடியால் பொது ஜனங்கள் இதை ஒரு கதர் ஸ்தாபனமென்று நம்பி பணங்கொடுத்து விடாமல் எச்சரிக்கப்படுகிறார்கள்.

சர்க்கா சங்கம், ஈரோடு. — S. ராமநாதன், காரியதரிசி.

## தஞ்சை மித்திரன்.

சென்ற வாரம் வெளியான தஞ்சை மித்திரனில் ஒரு நண்பர் அன்னதானத்தின் அருமை பெருமைகளையும் பட்டுக்கோட்டையிலிருக்கும் தஞ்சை அரச குடும்பத்தாரது தர்ம சத்திரத்தின் தற்கால சீர்கேட்டையும் எழுதும் முகத்தான், தற்கால நிர்வாக அதிகாரியின் க்ஷீண தெசையையும், அவருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டநஷ்டங்களையும தெரிவித்து அவருக்கு பதிலாக அம்மரபினரில் வேறுசிலரை நியமிக்கவும் தேவஸ்தான போர்டார் கெவனிக்கவும் கேட்டுக் கொள்ளுகிறார். இவ்வுத்தமருக்கு, தஞ்சை அரசாது மற்ற தர்மசொத்துகளை சிறப்புடன் செவ்வனே கவனித்துவரும் தஞ்சை ஜில்லா போர்டாரே இதையும் கெவனிக்கலாமென தோன்ற வில்லையோ அல்லது சுயமரியாதை மிகுந்த உயர்திரு பன்னீர் செல்வத்தின் ஆட்சியில் ஒரே வகுப்பினர் ஏகபோக உரிமை அடைய முடியாது என்ற கவலையாயிருக்கலாமோ என சந்தேகிக்கிறோம். மக்கள் இங்கு இச்சிறு விஷயத்தில் பிராமணீயம் தலைவிரித்தாடுவதை உணர்க.

"உண்மை விளம்பி."




நாலு தலைமுறை பாம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸுகளில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

### பழனி. சி. எம். சாமி மகாவீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகையினாலேயே நீற்றப்பட்டது. பெரியயூஹானின் முறை. அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும் ;இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையையெழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

### குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி.—நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பகோருகிறேன். கா. முகம்மது அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

### குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா16.

நற்சாட்சி:— தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்புஇவைகள்குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்

### சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

## C.மலையப்பசாமி.

நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னைபிராஞ்சுஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி43அரமனைக்காரத் தெரு ஜி.டி.சென்னை


## நாடார் சமூகத்தில் பார்ப்பனீயமொழிந்த திருமணம்.

சின்னாட்கு முன்பு கும்பகோணத்தின் கண் கூடிக்கலைவுற்ற நாடார் பெருமக்களின் பதினேழுவது கூட்டத்தின் தீர்மானத்துக்கொப்பவும், சுயமரியாதையே நம்பிறப்புரிமை எனஉழைக்கும் உயர் திருவாளர் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் அவர்களின் ஒப்புயர்விலா உபதேசத்திற்கிணங்கவும், நிகழர்ப்பசிமதி இருபத்திரண்டாம் நாள், இவ்வூர் திரு ப. அண்ணாமலை நாடாரவர்களின் புத்திரி திருவளர்செல்வி பொன்னுத்தாயம்மைக்கும் திரு மு. கந்தசாமி நாடார் அவர்களின் புத்திரன் திருவளர் செல்வன் சுப்பையாவுக்கும் நடந்தேறிய மன்றல் மகோற்சவத்தில் படுமிகு பாதகப் பார்ப்பனருறவு சிறிதுமின்றி இவ்வூர் பிரபல தயாளமிக்க தனதிபதியும் சுயமரியாதை இளங்காளைகளுக்குற்றவிடத்து ஊன்றுகோல்போல் உதவிபுரியும் பெருந்தகையாம் திருவாளர் அ. செந்தி விநாயகநாடார் அவர்களைக்கொண்டு நம் தாய்த் தனிமொழியாம் தமிழில் சடங்குகள் பல அதிவிமரிசையாய் செய்யப்பட்டதோடு மணமக்கல் அவ்வைபவத்தில் குழுமி நின்ற சுயமரியாதை வீரர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு அம்மன்றல் மங்கலத்துடன் முடிவெய்தியது. இனி நடக்கும் மணங்களிலும் பார்பபனரை அறவே ஒழித்திடல் வேண்டுமெனப் பேசிக்கொள்கின்றனர். நிற்க நிகழ்ந்த மன்றலில் முப்புரி நூலிடும் சாத்திரத்தைநிர்த்தூளியாக்கியதும் குறிப்பிடத்தக்கது. இம்மணத்தில் கலந்துகொண்ட சுயமரியாதை வீரர்களில், குறிப்பிடத்தக்கவர்கள், திருவாளர்கள் ஆ. செந்திவிநாயக நாடர், ரு. ஆறுமுக நாடார், ச, வீரசங்கிலி நாடார், செ. மு. கருப்பையா, ச. மு. பழனிச்சாமி நாடார், பெ. பொன்னம்பல நாடார், ரு. க. பெருமாள் ,முதலியோராவார்கள், சுயமரியாதை வீரரம் நாயக்கர் பெருமான் நீடுழி வாழ்க என்று ரா. க. பெருமாள் எழுதுகிறார்.

**மநு நீதி போன்ற அதர்ம நீதி உலகில் மற்றொன்றும் இல்லை.**

## திருவிடைமருதூரில் ஒரு பார்ப்பன உபாத்யாயரின் கொடுங்கோன்மை.

இம்மருதூர் நகரில் திருவாடுதுறைஆதீன நிர்வாகத்தில் நடைபெற்று வரும் உயர்தர கல்விச் சாலையில் 1-வது பாரம் B வகுப்புக்குப் போதகராயிருக்கும் அந்தணப்போதகர் அவ்வகுப்பு மாணவர்களைத் தண்டிக்கும் முறை நூதனமாகவும் திடுக்கிடத் தக்கதாகவும் மாணவர்களின் உயிருக்கு உலைவைக்கக் கூடியதாகவு மிருக்கின்றது. இக்கொடுமையை 1-11-27ல் தமிழ் "ஸ்வராஜ்யா"வில் அதன் நிருபர் மிகவும் மறை பொருளாக எழுதியிருக்கிறார். இம்முக்கிய விஷயத்தை அந்நிருபர் அவ்வளவு மறை பொருளாக எழுதியிருப்பது அதனிலும்விசனிக்கத் தக்கது.

மேற்படி வகுப்பு மாணவர்களில் பிராமணரல்லாத சிறுவர்களில் பாடத்திலோ அல்லது கணிதத்திலோ பிசகிவிடுவார்களாகில் பிரஸ்தாப போதகர் பிசகிவிட்ட மாணவர்களின் தொண்டையில் உதிரம் பெருகும்வரையில் தன் பெலங்கொண்ட மட்டும் அழுத்தமாகக் கிள்ளுவதும், கையைப் பிடித்து முறுக்கி பின்புறம் அக்கையின் தோள்ப்பட்டையில் ஓங்கிக் குத்துவதும், பின்னும் குப்புற வீழ்த்தி தன்னுடைய திருவடியை மாணவனின் முதுகின்மீது வைத்து அழுத்தமாக மிதிப்பதும், நெற்றிப்பொறியைப் பார்த்து குத்துவதும் பின்னும் புரியும் கொடுமைகள் பல. இன்னவர் நாள்தோறும் நடத்திவரும் குரு இலட்சணக் கூற்றை தலைமை உபாத்தியாயர் அறிந்தும் அறியாதவரைப் போல் பாராமுகமாயிருந்து வருவது பிராமணரல்லாத மாணவர்கள் தானே என்ற அலட்சியத்தால் போலும்.

மூன்றாவதாக சொன்ன தண்டனை முறையில் சிக்கிக்கொண்ட சுமார் 12 வயதுள்ள மாணவனொருவன் வெகுநேரம் மூர்ச்சையுற்று குப்புறக் கிடந்து அப்பால் தண்ணீர் ஊற்றி மூர்ச்சை தெளிந்தான். ஆகவே இத்தகைய போதகர் மாணவர்களுடைய உயிருக்கு உலைவைத்துவிடும் முன் வீட்டிற்கனுப்பப்படுவது சாலவும்நன்றாகும். தவிரவும் இன்னவர் இதற்கு முன் உபாத்தியாயர்களுக்குள் மித்ரபேதம் உண்டுபண்ணி அத்திறமைக்குப் பரிசாக பல மாதங்கள் வரையில் வேலையிலிருந்து விலக்கப்பட்டிருந்தவர், ஆகவே இத்தகைய போதகர் பள்ளி மாணவர்களின் உயிரை திரணமாக மதிப்பாரென நினைப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

ஆகவே தலைமை உபாத்தியாயர் பிரஸ்தாப உபாத்தியாயர் விஷயத்தில் சுயஜாதி அபிமானத்தை இன்னும் கட்டிக்கொண்டு அழாமல் ஷை போதகரை விரைவில் வீட்டிற்கு அனுப்பி மாணவர்களின் உயிரைக் காப்பாராக. "ஓர் பிரிதாபி".


## மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை, அநுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சித்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது. இது இவ்வுலகுக்குஓர் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தென ஜகத் பிரசித்திபெற்றது. துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்த்ரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது. எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். உலகத்தின் நாலு திசைகளினின்றும்ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும் இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும் கைகண்ட மருந்து

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம்


## இந்து கோயில்களின் பரிதாப நிலைமை,

திருச்சி சுயமரியாதை சங்கத்தார் ஷை பெயருள்ள 14 பக்கங்கொண்ட சிறு புத்தகமொன்று நமது பார்வைக்கு அனுப்பியுள்ளார்.

இப்புத்தகத்தில் "திராவிடன்" "தமிழ் நாடு" பத்திரிகைகளில் பிரசுரமான இரண்டு தலையங்கங்கள் உப தலையங்கங்களுடன் கிரமப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தின் விலையை நோக்குமிடத்து, இது லாபத்தை உத்தேசித்து வெளியிடப்பட்டதல்ல என்பதும், சுயமரியாதையை வளர்க்க எடுத்துக்கொண்ட முயற்சியே என்பதும் நாம் சொல்லாமலே நன்கு விளங்கும்.

புத்தகம் 1-க்கு விலை. ரூ. 0–0–1.
,, 200க்கு ,, ரூ. 1–0–0.

கிடைக்குமிடம்:—

சுயமரியாதைச் சங்கம்,
"சிவாஜி" கார்யாலயம்,
திருச்சிராப்பள்ளி.


## ஸ்ரீ.சௌடாம்பிகை மீது பதிகமும் அந்தாதி மாலையும்.

குண்ணத்தூர் தமிழ்வித்துவான் க. சொ. கடம்பன் செட்டியார் அவர்களால் இயற்றப் பெற்றது.

புஸ்தகம் 1-க்கு ரூ. 0-2-0
,, டஜன் ,, ரூ. 1-0-0
தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

க. சொ. சுப்பிரமணியன் செட்டியார்,
குண்ணத்தூர்.
திருமங்கலம் தாலூக்கா,


## "குடி அரசு" நிருபர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நிருபர்கள் "குடி அரசு"ப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும், தெளிவாகவும், காகிதத்தின் ஒரு பக்கத்தில், வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம்விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்த வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

மானேஜர்,
"குடி அரசு"


## உடனே தேவை.

"அபூர்வ சம்பாத்ய முறைகள்" என்ற ஆச்சரியமான புஸ்தகத்தைப் படித்து முடிந்ததும் உடனே சம்பாதிக்கத் தொடங்கலாம். விசேஷ நற்சாக்ஷிகள் பெற்ற மிக்க உபயோகமான அரிய நூல். பிரதி காப்பி விலை அணா 12. வி. பி. செலவு பிரத்தியேகம். ஆர். சேஷன், எடிடர். ஸ்ரீரங்கம் போஸ்டு, (திருச்சி) தென் இந்தியா,

அநேக காக்ஷிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள், 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு, கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள்:—

20 சாம்பின் பாக்கெட் ரூ. 2—0—0
10 ,, ,, ரூ. 1—4—0
நாட்டுக் காய்கறி 20 ,, ரூ. 2—8—0

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
தெற்காசரி தோட்டம், சேலம்.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.